Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 01 திங்கட்கிழமை (17.09.2012) பக்கங்கள் 20 ஓசை - 351


விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)


நம்பிக்கை




போலிப் பதிவுடன் சவாரி




கலைஞர் முதல் வலைஞர் வரை




அறப்பிழை!







## தமிழீழக் கோட்பாடு கிழக்கில் தோற்கடிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாண மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தமிழீழக் கோட்பாட்டை தோற்கடித்திருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஹொரனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 27 சதவீதமானவர்களே சிங்களவர்கள் இருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 67 சதவீத மானவர்கள் தமிழர்கள், நான்கு சதவீத மானர்வகளே சிங்களவர்களாக இருக்கிறார்கள்.

இருந்த போதும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 31 சதவீதமானவர்களே வாக்களித்துள்ளனர். அரசாங்கத்துக்கு 69 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர்.

இதன்மூலம் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தமிழீழக் கோட்பாட்டை தோற்கடித்திருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜனாதிபதியின் இந்திய விஜயம் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை முன்னிட்டு, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அவர் விஜயம் செய்யவுள்ள புதுடில்லி மற்றும் சாஞ்சி பகுதிகளின் பாதுகாப்புகளை, இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் உறுதிப்படுத்தியுள்ளது. இலங்கையின் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை இந்தியா செல்கிறார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழகத்தின் பல அரசியல் கட்சிகள் அன்றைய தினம் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

## மனித உரிமை குழு இன்று யாழ். வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இன்று யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய, பசுபிக், மத்திய கிழக்கு, வடஅமெரிக்க பிரிவுகளுக்குப் பொறுப்பான ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சோலர்ஸ் இருவருமே யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ். மாவட்டத்துக்கு வருகை தரும் குழுவினர், வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்சுமியை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பில் நேற்று சந்திப்பு

(கொழும்பு)


கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் நேற்றுக் காலை கொழும்பு பாக் வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் திடீர் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண விளையாட்டு யாழ். மாவட்டம் முதலிடம்



(கிளிநொச்சி)

வடமாகாணத்தின் ஆறாவது விளையாட்டுப் போட்டியில், யாழ். மாவட்டம் முதலாம் இடத்தினைப் பிடித்துக்கொண்டது. கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். இதில் 2012 வடமாகாண விளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்டம் முதலாம் இடத்தினையும் வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தினையும், மன்னார் மாவட்டம் மூன்றாம் இடத்தினையும், முல்லைத்தீவு மாவட்டம் நான்காம் இடத்தினையும், கிளிநொச்சி மாவட்டம் ஐந்தாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துரை தலைமையில் நடைப் பெற்ற நேற்றைய இறுதி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வேலணையில் நேற்றும் உருக்குலைந்த சடலம்

(வேலணை)


வேலணை, சாட்டி கடற்கரைப் பகுதியில் நேற்றும் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

காலை 9 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் குறித்த பகுதியில் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலத்தின் தலைப்பகுதி முற்றாக உருக்குலைந்துள்ளது. சடலத்தில் கறுப்பு நிறத்திலான உள்ளாடையும், சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்திலான சேட்டும் காணப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைப் படையினருக்கான பயிற்சிகள் தொடர்கின்றன

### இந்திய இராணுவ அதிகாரி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கான பயிற்சித் திட்டங்கள் இந்தியாவில் முன்னெடுக்கப்படுவதாக இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதியான லெப்.ஜெனரல் ஏ.கே.சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சித் திட்டமொன்றை நாம் நடத்துகிறோம். அது பல்வகையானது. இலங்கை இராணுவம், பல்வேறு துறைகளில் தான் கொண்டுள்ள அனுபவமானது, பெரும்பாலும் இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை மற்றும், கடற்படையினால் அளிக்கப்பட்ட மிகச சிறந்த பயிற்சிகளின் விளைவாகும் என்பதை ஏற்றுக்கொள்ளும் என எண்ணுகிறேன் என டெக்கான் குரோனிக்கிள் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண பயிற்சி அல்லாமல் மிகச் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் பல்வேறு துறைகளில் இலங்கை இராணுவத்தின் நிபுணத்துவத்துக்கு அது பெரும் பங்கு வகிப்பதாகவும் மேற்படி அதிகாரி ஒப்புக்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. அதிகாரிகளின் பயணத்தால் நாடுகள் அழிவடைவது திண்ணம்

### எச்சரிக்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அதிகாரிகளை (யூ.என்.எச்.ஆர்.சி) இலங்கைக்கு வர அனுமதி அளித்தது அரசாங்கத்தின் முட்டாள்தனம் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வண. அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஆதரவுடன் இலங்கைக்கு எதிராக கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட யூ.என்.எச்.ஆர்.சியை வர அனுமதித்தது ஏன் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்துடன், யூ.என்.எச்.ஆர்.சி

19 ஆம் பக்கம் பார்க்க

# சிறுவர் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பெற்றோரின் விழிப்புணர்வு அவசியமானது

## பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயந்த தெரிவிப்பு

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கல்வி நிறுவனங்களுக்கு ஒழுங்காகச் சென்று கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலமே தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும் என யாழ். பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு குழுப் பொறுப்பதிகாரி ஜெயந்த தெரிவித்தார்.

நேற்று மாலை 5.30 மணிக்கு கந்தர்மடம் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற கிராமிய சிவில் பாதுகாப்பு குழு மற்றும் பொதுமக்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பொலிஸ் பொறுப்பதிகாரி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 10 வயதுடைய சிறுவன் ஒருவனும் 13 வயதுடைய பிறிதொரு சிறுவனும் இணைந்து கடையொன்றில் திருட்டு முயற்சியில் ஈடுபட முனைந்தபோது கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் பெற்றோர் அரச அலுவலர்களாவார்கள். இச் சிறுவர்கள் தொழில் முறைத் திருடர்கள் போன்று செயற்பட்டுள்ளனர். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் தற்போதைய சூழ்நிலையில் அதீத கவனம் எடுக்கவேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதிகளில் 18 வயதிற்குக் குறைந்த இளைஞர், யுவதிகளை தங்குவதற்கு இடமளிக்க வேண்டாமென விடுதி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம். எனினும் சில இளைஞர்கள் பெண்களைக் காதலிப்பதாகக் கூறி அவர்களை விடுதிகளுக்கு அழைத்துச் சீரழிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து சமூகத்தில் பொறுப்புள்ளவர்கள் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் ஊடாக எம்முடன் தொடர்புகொண்டு இக் குற்றச் செயல்களைத் தடுக்க முன்வர வேண்டும்.

அண்மையில் அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட குருநகரைச் சேர்ந்த 20 பேர் கைது செயயப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுளளனர். இவர்களைப் பிணையில் எடுப்பதற்கு சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் ஊடாக எமது உதவி நாடப்பட்டது. எனினும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் குற்றச் செயல்களுடன் தொடர்பற்றவர்கள் என உறுதிப்படுத்தியே அவர்களை மீட்பதற்கு அறிக்கை நாம் சமர்ப்பிக்க முடியும்.

சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் மூலம் பொலிஸாருடன் தொடர்புகொண்டு பொதுமக்களுக்கான சேவையை வழங்கமுடியும் எனினும் அதை துஷ்பிரயோகம் செயயக்கூடாது எனக் கேட்டுக்கொண்டார். கந்தர்மடம் வடமேற்கு சிவில பாதுகாப்புக்குழுத் தலைவரும், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபருமான தியாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் கிராம அலுவலர் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் சனசமூக நிலையத் தலைவர், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொலிஸ் சார்ஜன்ட் ஒஸ்ரின் உட்பட பொதுமக்கள் பலரும கலந்துகொண்டனர். (26)

## அகலிப்பு பணிக்காக வீதி மூடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் இராச வீதியின் இருபாலை - கோண்டாவில் சந்திக்கும் மானிப்பாய் - கைதடி வீதிக்கும் இடைப்பட்ட மூன்று கிலோ மீற்றர் வீதி, அகலிப்பு பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது. இந்த வீதியூடாக போக்குவரத்தினை மேற்கொள்வோர் தங்கள் போக்குவரத்தினை பலாலி மற்றும் பருத்தித்துறை வீதியுடாக மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இந்த வீதி மூடப்பட்டு வீதி அகலிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாண வீதிச் செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (03)

# குஞ்சர் கடையடியில் விபத்து; இரு இளைஞர்கள் காயம்




நெல்லியடி குஞ்சர் கடைச் சந்தி விழுந்தாலடி எனுமிடத்தில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி நோக்கி சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளில் இருவர் முன்னுக்குப் பின் பயணித்த வேளை, சைக்கிளில் வந்தவரை முந்துவதற்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர் முயற்சித்துள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிளின் கான்ரில் சைக்கிளுடன் கொழுவி இழுபட்டுச் சென்றது. இதன்போது சைக்கிளில் வந்த தங்கராசா கபில்ராஜா (வயது - 20) என்பவர் சிறு காயமடைய, மோட்டார் சைக்கிளில் வந்தவரின் கால் முறிவடைந்தது. காயமடைந்த இருவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (18)

# மாம்பழம் சந்தியில் கடை உடைத்துத் திருட்டு


(யாழ்ப்பாணம்)

யாழ். மாம்பழம் சந்திப் பகுதியில் உள்ள புகைப்படக் கலையகம் உடைக்கப்பட்டு அங்கு இருந்த பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இதில் மாம்பழம் சந்தியில் உள்ள சுயேந்திரன் என்பவரின் கடையே உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸ் தடயவியல் நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

குறித்த கடையில் இவ்வாண்டு 4 ஆம் மாதமும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்று மூன்று இலட்ம் ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்ளையிடப்பட்டது. இந்தச் சம்பவத்தில் இருந்து மீள்வதற்கு முன்னர் இவ்வாறான சம்பவம் நடைபெற்றிருப்பது பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதாகக் கடையின் உரிமையாளர் சுயேந்திரன் தெரிவித்தார. (02)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் அருகே அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை நடைபெறுகின்றது. இந்தப் பூசையில் சைவ ஆசார சீலர்களாக உள்ள அறுபத்து மூன்று அடியார்களை அழைத்து அவர்களை அறுபத்து மூன்று நாயன்மார்களாகக் கருதி அமுது படைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் செய்யப்படும். முன்னதாக அவர்களுக்கு வெற்றிலை, பழம், பாக்கு, பூ, பணம் ஆகியன வழங்கப்பட்டு தீபத்தினை அறுபத்து மூவரும் வணங்கிய பின்னர் பெரிய புராணம் ஓதப்பட்டு குரு வணக்கமும் செலுத்தப்பட்ட பின்னர் அறுபத்து மூன்று அடியவர்களும் அமுது உண்பர். தினந்தோறும் அடியார்களுக்கு அமுது படைத்து பசி போக்கும் பணியைச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன்தாஸ் சுவாமிகள் முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இயக்குநர் சபை தெரிவுசெய்யப்பட்டது

(சாவகச்சேரி)

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற தெரிவு நிகழ்வில் தலைவராக அ.நடராஜா, உப தலைவராக வி.செல்லத்துரை ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.பிரதீபன், செ.ஜெயபாலன், செ.பேரின்பநாயகம், இ.ரட்ணாகரன், அ.தயாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# ஆட்டோ சாரதிகளுக்கு இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்குப் பிரதேச சபை முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் அமைப்பது தொடர்பான கூட்டம் இன்று மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் ஜீவன் மற்றும் யாழ்ப்பாண முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர், வலி. தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர், மானிப்பாய், இளவாலை பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

எனவே இப்பிரதேச முச்சக்கர வண்டி உரிமையாளர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (54)

# புதிய கட்டடத் திறப்புவிழா

(வடமராட்சி)

கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் த.யோகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை இன்றைய தினம் கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு பிற்பகல் 3.00 மணியளவில் பாடசாலை அதிபர் கே.நிம்மதிராஜா தலைமையில் நடைபெறவுள்ளதுடன் மேற்படி விருந்தினர்கள் அனைவரும் இந்நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளனத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கல்வயல் சன்சமூகானந்தா பொது நோக்கு மண்டபத்தில் கமநல நிலைய உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளதால் சகல அங்கத்தவரகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் க.வேதநாயகம் அறிவித்துள்ளார். (11)

# ஆனைவிழுந்தான்குளம் கிராமம் அபிவிருத்தியில் இணைக்கப்படவேண்டும்

## கிராம மட்ட அமைப்புக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளம் கிராமம் அபிவிருத்தியின் பால் ஈர்க்கப்பட வேண்டும் என அங்குள்ள கிராம மட்ட அமைப்பினர் தெரிவிக்கின்றனர். இக் கிராமத்தில் 425 விவசாயக் குடும்பங்கள் இருக்கின்ற நிலையில் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் இங்குள்ள மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நாளாந்த கூலித் தொழிலை நம்பிவாழும் இந்தக் கிராமமக்கள் தற்போதைய வறட்சி நிலை காரணமாக கூலித் தொழில் இன்றி அல்லற்படுவதாகவும் தெரிவிக்கும் கிராம மட்ட அமைப்பினர் இந்த கிராமத்தில் உள்ள இளைஞர்கள் யுவதிகள் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த கிராம்த்தில் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இருப்பதால் சில மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் அயற் கிராம பாடசாலைகளுக்கே சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த கிராமத்திலுள்ள மக்களின் வாழ்வியல் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும பொது அமைப்பினர் தெரிவித் துள்ளனர். (28)

# தற்காலிக வீடு வழங்கியதில் முறைகேடு

கிளிநொச்சிப் பகுதியில் அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தற்காலிக வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வீடற்ற பொதுமக்களுக்குத் தற்காலிக வீடு வழங்கப்படவில்லை. அதேவேளை ஆலயப் பணிபுரிபவர்களுககும், நிரந்தர வீடு உடையோருக்கும் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனத்திற்குப் பொதுமக்கள் தெரியப்படுத்திய போதும் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை எனத் தெரிவித் துள்ளனர். (69)

# யாழ். மாவட்ட மட்டத்திலான இலக்கியப்போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

மாவட்ட மட்ட இலக்கிய விழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

**கனிஷ்ட பிரிவு, கவிதைப் போட்டி,**

க.டிலக்சி(யா/வேலணை கிழக்கு ம.வி), த.அனிஸ்ரா(யா/வேலணை கிழக்கு ம.வி), பி.அபிநயா(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை).

**கட்டுரைப்போட்டி,**

த.அருள்செல்வி(யா/இணுவில் மத்திய கல்லூரி), கு.மாதுமை(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), த.திவாசினி(யா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி,**

அ.யோ.கிருஸ்ரன்(யா/புனித பத்திரிசியார் கல்லூரி), சி.பொ.கஸ்ரோ(யா/புனிதபத்திரிசியார் கல்லூரி), த.மரியதர்சன் (யா/புனிதபத்திரிசியார் கல்லூரி ), த.அனோஜன்(யா/இணுவில் மத்திய கல்லூரி)

**கையெழுத்துப் போட்டி,**

த.கவிதரன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), கீ.தினோஜிகா(யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), ப.சங்கவி(யா/இணுவில் மத்திய கல்லூரி).

**சிரேஷ்டபிரிவு, கவிதைப் போட்டி,**

இ.கோகிலானி(யா/தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி), வே.பிரகாசினி(யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), கு.பிரியங்கா(யா/கனகரத்தினம் ம.ம வித்தியாலயம்),

**கட்டுரைப்போட்டி,**

தே.காயத்திரி(யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), கே.பானுசா(யா/நவாலி மகா வித்தியாலயம்), க.சுகன்ஜா(யா/அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி),

**கவிதைப்போட்டி,**

க.கலைமதி(யா/வேலணை மத்திய கல்லூரி), த.சிந்துஜா (யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), ம.நிரோஜன்(யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை),

**பாடல் நயத்தல் போட்டி,**

சொ.தருமதன்(யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), ப.விஜிதா(யா/தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி), சு.சோபிதா(யா/தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி), (116)

-தொடரும்-

# வழிகாட்டல் கருத்தரங்கு

(துணுக்காய்)

க.பொ.த.(உயர்தரம்) எழுதிய மாணவர்களுக்கும். க.பொ.த.(உயர்தரம்) வகுப்பில் கற்கும் மாணவர்களுக்குமான கல்வி வழிகாட்டல் கருத்தரங்குகளை துணுக்காய் கல்வி வலயத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்ப கருத்தரங்கு மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்குகள் தொடராக மு/கற்சிவைமடு அ.த.க. பாடசாலையில் 21ஆம் திகதி காலை 8.30 - 2.30 வரையும் நடைபெறவுள்ளது. மேலும் மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில் 28ஆம் திகதி காலை 8.30-2.30 வரையும் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலய கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றல் தெரிவித் துள்ளார். (42)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 30 பேர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)


கடந்தவாரம் யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தம் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 30 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதிப்பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஷ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் சட்டவிரோத மதுபான சம்பந்தமான ஒன்பது வழக்குகளும் கஞ்சா சம்பந்தமாக இரண்டு வழக்குகளும், குடி போதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாக 38 வழக்குகளும் சூழல் மாசடைதல் சம்பந்தமாக இரண்டு வழக்குகளும் பொது இடங்களில் மது போதையில் கலகம் விளைவித்தமை சம்பந்தமாக 18 வழக்குகளும், பொது இடங்களில் மது அருந்தியமை தொடர்பில் 17 வழக்குகளும் நீதிமன்றங்ளில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொலிஸாரின் நடமாடும் சேவை நெடுந்தீவு, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் நடைபெற்றதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார். (பா)

# கோவிந்த மலையைக் கையில் கொண்டு...



## "பொன்னாலயம்பதியில் வரதராஜப் பெருமாளாகவும் துன்னாலயம் பதியில் வல்லிபுர ஆழ்வாராகவும்"

துன்னாலையைச் சேர்ந்த கணபதிச்சாமிக் குருக்களின் பாரம்பரையினரே இவ்வாலய பூசகர்களாக உள்ளனர். கொடியேற்ற உற்சவக்கொடி கரவெட்டியைச் சேர்ந்த 'செங்குந்தர்' பரம்பரையினரால் கொண்டுவரப்படும் இவர்கள் மாய வனுக்கான கொடியை மேள தாளத்துடன் எடுத்து வருவது மரபு. முதலாம் உற்சவத்திலிருந்து ஆறாம் உற்சவம் வரை எம்பெருமான் உள்வீதியாக வலம் வருவார். 7ஆம் உற்சவத்தை ஆழ்வார் திருவிழா என்றும் அழைப்பார்கள் இவ் உற்சவமே முதல்முதலாக வெளிவீதி உற்சவமாக உலாவரும் அடுத்து 8ஆம் உற்சவம் குருக்கட்டு விநாயகர் தரிசனம். எம் பெருமான் குருக்கட்டு விநாயகர் ஆலயத்தை நோக்கிச் சென்று விநாயகருடையு ஆசி பெற்று வீதிவலம் வருவார்.

9ஆம் உற்சவம் வெண்ணெய் திருடல் உற்சவமாகும் இவ் உற்சவம் பெரும் களைகட்டிய உற்சவமாகும். தெற்கு வாசலில் உள்ள எழுந்தருளி இவ் உற்சவ காலத்தில் உலாவரும் அதனால் இவ் எழுந்தருளியைத் தூக்கி வலம் வருவதில் மக்கள் பேரானந்தம் அடைவர். தம் தோள்களில் இவரை ஒருமுறையாவது தாங்க விடவேண்டும் என்று ஆர்வம் காட்டுவர். பிருந்தாவனத்திலே கிருஸ்ணன் வெண்ணெய் திருடி உண்ட வரலாறு நாடகமாக கற்கோவளம் அறநெறிப்பாடசாலை மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்படும். இதில் ஒரு தத்துவ விளக்கமும் உண்டு என்பர். ஆயர்கள் உடைய செல்வம் வெண்ணெய் இது ஒரு தனி மனிதனிடம் இருப்பதை விட எல்லோருடைய பசியையும் ஆற்ற வேண்டும் என்ற தத்துவத்தை விளக்குவதாகும். -(தொடரும்)-

திரு.ச.யாதவானந்தன்
(ஆசிரியர்)

# துணை நில் கண்ணா...

அஞ்சி வாழும் வாழ்வினிலேகண்ணா - எமக்கு
அசையாது துணை நின்ற மாயவா!
ஐஞ்சு தலை நாகசாபத்தைத்தீர்த்து - லவல்லி
பிஞ்சு மழலை வரம் கொடுத்தவா
பஞ்சு மணல் நாகபாம்புடன் மாயக்கண்ணா - நீ
கொஞ்சி விளையாடாயோ... என்
ஊனக்கண் துடிக்கிறதே... கண்ணா.

பொலிகண்டியூர் கே.கே.விசிந்தன்

# மான் வேட்டைக்கு ஐயாயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

கனகராயன் குளம் காட்டுப் பகுதியில் மான வேட்டையாடி இறைச்சியை எடுத்துச் சென்ற ஒருவருக்கு வவுனியா நீதி மன்றம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கனகராயன் குளம் பகுதியில் வைத்து மாங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் மீது வவுனியா நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு வவுனியா நீதி மன்றம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளதாகத் தெரியவருகின்றது. காட்டு மிருகங்களை வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாக இலங்கையில் கொள்ளப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெறற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்படுள்ளது. (பா)

தீய செயல் குறித்து தெய்வத்தின் முன்னால் வெட்கப்படாதே மனிதன் முன்பாக வெட்கப்படு அப்பொழுதே உனக்கு விமோசனம் ஆரம்பம். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## யாருக்கு யார் துரோகிகள்?

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்து சுமார் ஒரு வார காலத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடமிருந்து இன சௌஜன்யக் கருத்துக்களையும் நல்லிணக்கத்துக்கான வேண்டுதல்களையும் கேட்க முடிந்தது ஒருவகையில் வரலாறு செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். சகல இனக் கட்சிகளும் இணைந்த தேசிய அரசுக்கும் நாங்கள் தயார் என்று உச்சபட்ச நல்லிணக்க அறிவிப்பையும் கடைசியில் அவர்கள் வெளியிட்டதை, அடுத்த சில வாரங்களில் அவர்களே நம்ப மாட்டார்கள்.

முதலில், நாங்கள் தமிழ் பேசும் மக்களல்லவா என்று முஸ்லிம் காங்கிரசுக்கு நினைவுபடுத்தினார்கள். தமிழரசுக் கட்சியினருக்கு உதவி தேவைப்படும்போது இதுகூட ஞாபகம் வந்துவிடும் என்று முஸ்லிம்கள் கிண்டலடித்துவிட்டு அரசுடனான தங்கள் பேரத்தில் மும்முரமாயிருந்தார்கள். இப்படியே விட்டால் கூட்டமைப்பில் கேட்டு வென்ற உறுப்பினர்களில் கணிசமானவர்கள் அரசு பக்கம் தாவி விடுவார்கள் என்ற நிலைமை வந்ததும், அவர்களைத் தாக்காட்டுவதற்காக, தேசிய அரசமைத்து எல்லோருமாகச் சேர்ந்து கொள்ளலாம் பொறுங்கள் என்ற நல்லிணக்க அறிவிப்பை விட்டார்கள்.

ஒருவாறு அரசு முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போகிறது என்று அந்தப் பேரங்கள் முடிவானதும், கூட்டமைப்பு பழையபடி மடியிலிருந்து துரோகக் கத்திகளை எடுத்து வீச ஆரம்பித்துவிட்டது. நம்பி வாக்களித்த முஸ்லிம் மக்களைக் கைவிட்டு, அரசுடன் இணைந்துகொண்டதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களுக்கே துரோகமிழைத்து விட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முதலாவது கத்தியை வீசினார்.

வழக்கமாக தமிழ்மக்களுக்குத் துரோகமிழைத்து விட்டதாகவே கத்தியை வீசும் தலைவர் இம்முறை முஸ்லிம்களுக்கே முஸ்லிம் காங்கிரஸ் துரோகமிழைத்துவிட்டது என்று 'பஞ்ச்' வைத்திருப்பதை முஸ்லிம்களும்கூட ரசித்துச் சிரித்தார்கள். முஸ்லிம் காங்கிரசை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே முஸ்லிம்கள் மீதான அக்கறை அதிகம் என்பது அவர்களுக்குத் தெரிந்ததுதானே?

முஸ்லிம் மக்கள் மீது அன்பும் அக்கறையும் கொண்ட அடுத்த தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனின் குற்றச்சாட்டு, முஸ்லிம் காங்கிரசுக்கு அரசியல் நாகரிகம் மற்றும் மனித விழுமியங்கள் பற்றி பாடம் நடத்துவதாக இருந்தது. கூட்டமைப்பினரைக் காக்க வைத்துவிட்டு அநாகரிகமான முறையில் அரசிடம் போய் கூட்டுச் சேர்ந்துவிட்ட முஸ்லிம் காங்கிரசின் 'துரோகத்திற்காக' அவரும் ஒரு பாட்டம் குமுறினார்.

தங்களது அழுக்குகளைத் தெரிந்துகொள்ளாமலே மற்றவர் அழுக்குகளைப் பேசிக்கொண்டிருக்கும் நீண்ட நெடிய தவறுப் பாரம்பரியத்திலிருந்து இன்னும் இவர்கள் மீளவில்லை. அவர்கள் நாகரிகம் கருதி நாசூக்காக சுட்டிக்காட்டும்போது கூட, அதைப் பற்றிப் புரிந்துகொள்ளாமல் மற்றவர் துரோகங்களின் பட்டியலையே வாசித்துக்கொண்டிருக்கும் மரமண்டைகளாக இருக்கிறார்கள்.

தேர்தல் பிரசாரத்தின்போது கூட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இவர்கள் செய்த துரோகங்களை மெல்லத் தொட்டுக் காட்டினார். 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தாமும் ஒரு தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை இந்தத் தமிழ்த் தலைமை உதாசீனம் செய்ததை, முஸ்லிம் சமூகம் தமக்கிழைக்கப்பட்ட ஒரு வரலாற்றுத் துரோகமாகவே பார்க்கிறது என்று ஓர் உதாரணம் சொன்னார்.

அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் சேர்ந்து ஆட்சியமைத்தால் அது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்று வாய்கூசாமல் சொல்லிக் கொண்டிருக்கும் இவர்கள், முஸ்லிம்களைத் துரத்தியபோதும் கொலைகள் செய்தபோதும், கப்பம் கடத்தல் என்று அவர்களை வாழவிடாமல் அடித்தபோதும் மறுத்துப் பேசாதிருந்தார்கள். புலிகளுடன் சேர்ந்துகொண்டு, தங்கள் கூட்டமைப்பை இவர்கள் உருவாக்கியபோது, அந்தத் துரோகம் பற்றி முஸ்லிம் சமூகம் ஒரு நாகரிகம் கருதியே குத்திக் காட்டுவதில்லை என்பது இந்த மொண்ணைகளுக்குப் புரிவதே இல்லை. - ஆசிரியர்

# கடும் எதிர்ப்பையும் தாண்டி "சீபா"வில் ஒப்பமிட அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சர்ச்சைக்குரிய சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் வர்த்தக சமூகத்தின் கடுமையான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசாங்கம் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சீபா உடன்படிக்கை நிச்சயமாக கைச்சாத்திடப்படும் எனவும், எனினும் அவசர அவசரமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் திட்டம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒப்பந்தம் தொடர்பில் சில உள்ளூர் வர்த்தகர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேச்சதிகாரமான தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும், பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் எட்டப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சீபா உடன்படிக்கையின் நன்மை, தீமைகள் தொடர்பில் தொடர்ந்தும் ஆராயப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உடன்படிக்கை தொடர்பான சகல விடயங்களையும் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்துவது உசிதமாகாது என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து இறக்குமதியான கொள்கலனில் கதிர்வீச்சுத் தாக்கம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்திப் பொருட்கள் கொண்ட கொள்கலனில் செயற்கைக் கதிர்வீச்சுப் பதார்த்தங்கள் இருப்பது கொழும்புத் துறைமுகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவித்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

125 தொகுதி துருப்பிடிக்காத உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்திப் பொருட்கள் கொண்ட இக்கொள்கலனில் கோபால் - 60 எனும் மிக ஆபத்தான கதிர்வீச்சுப் பதார்த்தம் காணப்பட்டதாக இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ஆர்.எல். விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக சபையின் கதிர்வீச்சுப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின் இப்பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதை நிறுத்திவைப்பதற்குத் தீர்மானித்தாக அவர் கூறினார். மேற்படி இந்திய நிறுவனத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து நாம் இன்னும் ஆராயவில்லை. ஆனால் அப்பொருட்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய அணுசக்தி ஆணைக்குழு மற்றும் சர்வதேச அணுசக்தி முகவரகம் ஆகியவற்றுக்கு இப் பொருட்கள் குறித்து அறிவிப்பதற்கும் இலங்கை சுங்கத்திணைக்களத்தை அறிவுறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கலாநிதி விஜேவர்தன கூறினார்.

# பெண்ணின் சடலம் சம்மாந்துறையில்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சொறிக்கல்முனை பாலனாவெளி வயல் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் ஒரு பெண்ணின் சிதைவடைந்த உடல்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பிற்பகல், பொது மக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பேரில் இந்த உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதேவேளை குறித்த இடத்தில் சில மதுபான போத்தல்களும் காணபபட்டுள்ளன.

சம்மாந்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளின் தங்கம் தென்னிந்தியாவுக்கு கடத்தல்?

(கொழும்பு)

இலங்கையிலிருந்து என்றுமில்லாத அளவில் தென்னிந்தியாவுக்கு சட்டவிரோத தங்கக் கடத்தல் நடைபெற்று வருவது இனங்காணப்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள், இவை புலிகளால் கைவிடப்பட்ட தங்கமாக இருக்கலாமோ என்று சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு கொழும்பிலிருந்து வரும் விமானங்களில் வருவோர் இவ்வாறு தங்கத்தை இந்தியாவுக்குள் கடத்திவருவது அதிர்ச்சி தருவதாகக் கூறியிருக்கும் இந்திய சுங்கத் திணைக்கள வட்டாரங்கள், இது புலிகள் வசம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கமாக இருக்கலாமோ என்று தாம் சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் சென்னை விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட 29 சட்டவிரோத தங்கக் கடத்தல் முயற்சிகளில் 22 முயற்சிகள் இலங்கையிலிருந்து வந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டவை என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வழமையாக சிங்கப்பூரிலிருந்தும், டுபாயிலிருந்தும்தான் இவ்வாறு சென்னைக்கு தங்கம் கடத்தப்படுவதுண்டு. ஆனால், இந்த ஆண்டில் இதுவரை கைப்பற்றப்பட்ட தங்கக் கடத்தல் முயற்சிகளில் 75 சதவீதமானவை இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் தங்க உற்பத்தியோ அல்லது பெரிய அளவில் தங்க வியாபாரமோ நடைபெறாத சூழ்நிலையில் இது எப்படிச் சாத்தியம்? என்று கேள்வியெழுப்பும் சுங்கத் திணைக்கள புலனாய்வு அதிகாரிகள், அதனால்தான் இது புலிகளிடமிருந்து போர்க்காலத்தில் கைப்பற்றப்பட்ட தங்கமாக இருக்கலாமோ என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி இறுதி யுத்த காலத்தில் புலிகள் வசமிருந்து 6,000 கிலோ அளவான் தங்கம் கைப்பற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடும் டெக்கான் க்றொனிக்கல் ஊடகம், இந்தத் தங்கம் தனியார் கைகளுக்கு மாறி இந்தியாவுக்குக் கடத்தப்படுகிறதோ என்ற சந்தேகம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

வழமையாக தங்க பிஸ்கட்டுக்களாகவே தங்கம் கடத்தப்படுவதுண்டு என்றும், ஆனால், அண்மையில் ஒரு பெண் கொண்டு வந்த குடையின் உட்பக்கப் பிடி தங்கத்தினால் செய்யப்பட்டு கறுப்பு முலாம் பூசப்பட்டிருந்தது என்றும், மற்றொரு பயணி கொண்டு வந்த பயணப் பையின் பிடி தங்கத்திலானது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளை மேற்கோள் காட்டி டெக்கான் க்றொனிக்கல் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரையில் பிடிபட்டிருப்பவைதான் இவை என்றும், இதுபோன்று வேறு பல வழிகளில் இலங்கையிலிருந்து ஏற்கனவே பெருமளவு தங்கம் இந்தியாவுக்குள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சந்தேகப்படுவதாகவும் அந்தச் செய்தி மேலும் குறிப்பிடுகிறது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் தலைமையில் ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் பொதுமக்களிடமிருந்து போராட்ட நிதி என்ற பெயரில் ஆரம்ப காலத்தில் பெருமளவு தங்கம் பெறப்பட்டது.

இறுதி யுத்த காலம் வரையில் புலம்பெயர் தேசங்களில் வாழும் பல தமிழர்கள் தமது தங்க ஆபரணங்களை அப்படியே புலிகளின் ஆதரவு நிதி சேகரிப்பாளர்களிடம் போராட்ட நிதிக்கென வழங்கியிருந்தனர்.

இதுதவிரவும், புலிகளால் நடத்தப்பட்ட வங்கிக் கிளைகளில் பெருமளவு பொதுமக்கள் தமது தங்க நகைகளை ஈடு வைத்திருந்தனர்.

இன்னும், இறுதிப் போர்க் காலத்தில் மீண்டும், மீண்டும் இடம்பெயர்ந்து அலைந்த வன்னிப் பகுதி மக்கள் தமது தங்க நகைகளை பல இடங்களில் பாதுகாப்பாகப் புதைத்து வைத்துவிட்டு அற்றை அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டதாகக் கூறிவருகின்றனர். இறந்தவர்களின் உடல்களில்கூட தங்க ஆபரணங்கள் காணப்பட்டதாகவும், அவை பலராலும் களவாடப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு, போராட்டத்தின் பெயரால் பொது மக்களிடம் திரட்டப்பட்ட பெருமளவு தங்கமும், புலிகளின் வங்கிகளில் ஈடு வைக்கப்பட்ட தங்கமும், இடப்பெயர்வுகள், அழிவுகளின்போது பொது மக்கள் தவறவிட்ட பெருமளவு தங்க ஆபரணங்களும் பல்வேறு தரப்புக்களின் கைகளில் சிக்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதால், அவையே சில வர்த்தகர்களின் கைகளில் சிக்கி இந்தியாவுக்கு கடத்தப்படுகிறதோ என்றும் சந்தேகம் வெளியிடப்படுகிறது.

## லெ.முருகபூபதியின் தொடர்கட்டுரையிலிருந்து


# நம்பிக்கை

லண்டன் பி.பி.ஸி தமிழ் ஓசையில் சில வருடங்களுக்கு முன்னர் நான் கேட்ட செய்தி இது:

இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் புதிய ஜனாதிபதி தெரிவாகுவார் என்று தமது சிங்கள சோதிட சஞ்சிகையில் எழுதியிருந்த சந்திரஸ்ரீ பண்டார என்னும் ஒரு சோதிடர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டார்.

ஆனால் சில செப்ரெம்பர்கள் கடந்துவிட்டன. இலங்கை ஜனாதிபதியின் தலைமையிலான

**இலங்கை ஜனாதிபதியில் மாற்றம் வரப்போகிறது என்று எந்த நேரத்தில் அந்த சிங்கள சோதிடர் ஆரூடம் கணித்து தமது சோதிட சஞ்சிகையில் எழுதினாரோ தெரியவில்லை.? ஆனால் அவருக்கு "இப்படி தான் எழுதினால் மாமியார் வீட்டுக்குப்போக நேரும்" என்பதை தமது ஜாதகத்தில் கணித்துக்கொள்ள முடியாதுபோனதுதான் துர்ப்பாக்கியம்.**



கூட்டணிதான் இந்த ஆண்டு செப்ரெம்பர் நடந்த மூன்று மாகாண சபைத் தேர் தலிலும் வெற்றியை தக்க வைத்துள்ளது. ஜனாதிபதியும் தொடர்ந்து பதவியில்தான் இருக்கிறார்.

அந்தச் சோதிடரின் ஆரூடம் பொய்த்தது.

இப்படி பல சோதிடர்களின் ஆரூடங்கள் இலங்கை, இந்திய அரசியலில் பொய்த்துத்தான் இருக்கின்றன. எனினும் சோதிடர்களும் தங்கள் பணியை நிறுத்தவில்லை. இலங்கை, இந்திய அரசியல்வாதிகளும் சோதிடம் பார்ப்பதை நிறுத்தவில்லை.




வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றியும் பல சோதிடர்கள் முன்பு கணித்துச்சொன்னதை யும், தமிழ்ஈழம் பற்றி யும் பல சோதிடக் கணிப்பு கள் முன்பு வெளி வந்திருப் பதை யும் மறப்பதற்கில்லை.

அரசியல் தலைவர்கள் குறித்து எவரும் எப்படியும் விமர்சித்துவிடலாம். ஆனால் அவர்களின் எதிர் காலம் குறித்து ஆரூடம் கூறும்பொழுது அவர்களுக்குச் சாதகமாதவே பேசவேண்டும் எழுதவேண்டும் என்ற விதி முறையை அந்தச் சிங்களச் சோதிடருக்கு அரசாங்கத்தின் காவல் மற்றும் பாதுகாப்புத் துறைகள் இச்சம்பவத்தின் மூலம் உணர்த்திவிடுகின்றன.

பொதுவாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் சோதிடத்திலும் யாகங்களிலும் நம்பிக்கைகொண்ட அரசியல்வாதிகள் அநேகர். அவர்களுக்கு சாதகமாக சோதிடர்கள் ஏதும் கணித்துச்சொன்னால் ஆனந்தப்படுவார்கள். ஆனால் பாதகமாகச் சொல்லிவிட்டால் சோதிடர்பாடு அதோகதிதான்.

சகுனம் பார்த்தல், இராசி பலன் பார்த்தல், அட்டமி நவமி பார்த்துத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தல், அமைச்சரவை அமைப்பதற்கு நல்ல நாள் குறித்தல் இத்தியாதி-விடயங்களில் இந்த அரசியல்வாதிகள் எப்பொழுதும் தங்களின் நலன்கருதியே இயங்குவார்கள்.

ஒரு காலத்தில் கறுப்புத்துணியை தோளில் சுமந்து பகுத்தறிவுப்பிரசாரம்



செய்த கருணாநிதி, தற்காலத்தில் மஞ்சள் துணியுடன் சக்கரநாற்காலியில் வலம்வருகிறார். இந்த மஞ்சளின் மகிமை அவருக்கும், அதனை வலியுறுத்தி போர்த்தியவர்களுக்கும் மாத்திரமே தெரியும்.

முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான பிரேமதாஸாவுக்காக கொழும்பு கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் கோயிலில் தினமும் காலையில் அவரது ஆயுளுக்காகவும் நல்லாரோக்கியத்திற்காகவும் விசேட பூசை நடந்துகொண்டிருந்தது. அவர் கொழும்பு ஆமர்வீதி - கிராண்ட்பாஸ் வீதிச் சந்தியில் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியினால் சிதறும் வரையில் அந்த விசேட பிரார்த்தனையை கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் ஏற்றுக் கொண்டுதானிருந்திருக்க வேண்டும்.

இ.தொ.கா எம்.எஸ். செல்லச்சாமி, ஜனாதிபதிகளின் பிறந்தநாட்களின் போது மறக்காமல் கோயில்களில் அர்ச்சனை செய்வார். கோயில் ஐயர் தரும் காளாஞ்சி பிரசாதத்தை மாலை மரியாதையுடன் ஜனாதிபதிகளுக்கு நேரில் சென்று வழங்கும் மரபையும் அந்தக்காட்சி பத்திரிகைகளில் படங்களாக வெளியாகும் மரபையும் தொடர்ந்து பேணிக்கொண்டுதானிருந்தார்.

இலங்கை ஜனாதிபதியில் மாற்றம் வரப்போகிறது என்று எந்த நேரத்தில் பி.பி.ஸி.யில் குறிப்பிடப்பட்ட அந்த சிங்கள சோதிடர் ஆரூடம் கணித்து தமது சோதிட சஞ்சிகையில் எழுதினாரோ தெரியவில்லை.?

ஆனால் அவருக்கு "இப்படி தான் எழுதினால் மாமியார் வீட்டுக்குப்போக நேரும்" என்பதை தமது ஜாதகத்தில் கணித்துக்கொள்ள முடியாதுபோனது தான் துர்ப்பாக்கியம்.

நான் இலங்கையில் வீரகேசரி பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம்.

எனக்கு சிங்கள மொழியும் தெரிந்திருந்தமையால் சில சிங்கள வர்த்தகப் பெரும்புள்ளிகளின் சாதகங்களை (சோதிடம்) மொழிபெயர்த்துச்சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருந்தது.


இந்தச் சாதகம், தமிழ்ப்பஞ்சாங்கம் பார்த்து ஒரு சோதிடரால் கணிக்கப்படும் குறிப்பு அல்ல. வித்தியாசமானது.

அந்தச் சோதிடத்தின் பெயர் நந்தி வாக்கியம்.

நந்திவாக்கியம் பனையோலை ஏட்டில் பதிவாகியிருக்கிறது. ஏராளமான நந்திவாக்கிய ஏட்டுச்சுவடிகளுடன் மகாலிங்கம் என்று ஒரு தாடி வளர்த்த சோதிடர் நீர்கொழும்பிலிருந்து கொழும்பு செல்லும் பாதையில் வத்தளையில் சிறிய வாடகை வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்தார்.

தமது வெண்ணிறத் தாடியை வருடிய வாறு சாய்மனைக் கதிரையில் அமர்ந்து வெற்றிலை குதப்பிக்கொண்டு அருகிலே துப்புவதற்கு படிகமும் வைத்துக்கொண்டு கண்ணாடியே அணியாமல் கண்களை இடுக்கியவாறு ஏடுகளை உற்றுநோக்கி வாசிப்பார்.

நான் அவருக்கு அருகே ஒரு ஸ்டூலை வைத்துக்கொண்டு அவர் சொல்லச்சொல்ல எழுதுவேன். எதுகை மோனையோடு நந்திவாக்கியம் பாடல் வரிகளாக வந்துவிழும். நான் வேகமாக எழுது வேன். இரண்டிரண்டு வரிகள் முடிந்ததும் சோதிடர் மகாலிங்கம் அதன் பொழிப்புரையை சொல்லுவார். நான் அதனை சிங்களத்தில் மொழிபெயர்த்து சாதகம் கணிக்க வந்தவர்களுக்குச் சொல்லுவேன்.



அவர்களும் தம் மிடமிருக்கும் நோட்புக்கில் சுருக்கமாக எழுதிக்கொள்வார்கள்.

நான்கு வரி எழுதியதும் பொழிப்புரையை விஸ்தாரமாக விளக்கவுரையாகவே மகாலிங்கம் நிகழ்த்துவார். அது வெறும் கதையளப்பாகவும் மாறி எனக்கும் வந்தவர்களுக்கும் அலுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தும்.

ஒரு அமைச்சரின் சகோதரிக்குத்தான் முதல் முதலில் இந்த மொழிபெயர்ப்பு வேலைக்காக சென்றேன். எங்கள் ஊரில் அமைச்சருக்கு நெருக்கமான ஒரு தமிழ் பிரமுகர், அவர்தான் ஐ.நாவில் முக்கிய பதவியில் இருக்கும் ராதிகா குமாரசாமியின் தாய் மாமனார் ஜெயம் விஜயரத்தினம். அவரது தந்தையார் விஜயரத்தினம் அவர்கள் நீர்கொழும்பில் மேயராகவும் மக்களுக்கு தொண்டாற்றியவர். அவர் 1954 இல் நீர்கொழும்பில் ஸ்தாபித்த இந்து தமிழ் வித்தியாலயம்தான் தற்போது கம்பஹா மாவட்டத்தில் இருக்கும் ஒரே ஒரு இந்துக்கல்லூரி.இன்றும் அவரது பெயரைச்சொல்கிறது.

பிரபாகரனின் விடுதலைப்புலிகளும் ஏனைய இயக்கங்களும்நீர்கொழும்பை தமது தமிழ் ஈழ வரைபடத்தில் இணைக்காதுவிட்டாலும் கூட 1977, 1981, 1983 காலப்பகுதியில் தாக்கப்பட்டதுதான்.

சிலவாரங்களுக்கு முன்னர் மறைந்த முன்னாள் புடவைக் கைத்தொழில் அமைச்சர் விஜயபாலமெண்டிஸின் சகோதரியையும் அவரது கணவரையும் அறிமுகப்படுத்துவதற்காக ஜெயம் விஜயரத்தினம் ஐயா, எனது வீடுதேடி வந்துவிட்டார்.

எந்த நேரத்தில் இந்தச் சகவாசம் எனக்குக் கிடைத்ததோ தெரியாது. ஆனால் அது தொடர்கதையாகி விட்டது.

மகாலிங்கம், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடும்பத்துக்கும் நந்திவாக்கியம் வாசித்துக்கொடுத்தவர் என்றும் அந்த சோதிடத்தை அம்மையாருக்கு நெருக்கமான முன்னாள் இறைவரித் திணைக்கள ஆணையாளர் சிற்றம்பலம்தான் மொழிபெயர்த்தார் என்றும் ஒரு இரகசியத் தகவல் எப்படியோ வெளியில் கசிந்தமையால்தான் பல அரசியல்வாதிகளும் அவர்களின் செல்வந்த நண்பர் குடும்பங்களும் மகாலிங்கத்தின் வீட்டுக்குப் படையெடுத்தனர்.

அந்தநாட்களில் ஆயிரம் பத்தாயிரம் என்று ஊதியம் சம்பாதித்தார் அந்த நந்திவாக்கிய சோதிடர். ஆனால் அவரது வருமானத்துக்கு ஏற்றதாக அவரது குடும்பமும் அந்த வீடும் அமைந்திருக்காதது முதுமையிலும் கண்ணாடி அணியாத அவரது கோலத்தைவிட மிகப்பேராச்சரியம்.

அங்கே காலையில் நந்திவாக்கியம் எழுதி மொழிபெயர்க்கவும் சென்றால் அந்த முதல்பாகம் முடிய மாலையாகிவிடும். முதல்பாகத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை அவர் சொல்லச்சொல்ல எழுதுவேன். இரண்டாம் பாகத்தை சிலநாட்களின் பின்னர் மகாலிங்கமே எழுதிக்கொடுப்பார்.

இப்படித்தான் ஒருநாள் ஒரு சிங்கள வர்த்தக பிரமுகருக்கு எழுதிக் கொண்டிருந்தபோது ஒரு சிங்கள அன்பர் காரில் வந்திறங்கினார். மகாலிங்கத்திற்கு சிங்களம் தெரியாது. வந்தவரிடம் வந்த காரணத்தைக் கேட்குமாறு என்னிடம் சொன்னார்.

நானும் அந்த அன்பரை அமரச் செய்த பின்னர் கேட்டேன்.

அந்த நபர் 172 பக்கமுள்ள பெரிய நோட்டுப் புத்தகத்தை விரித்து காண்பித்து அதில் சில முன்பகுதி பக்கங்களை தனது விரல்களினால் மடித்து (மறைத்து) குறிப்பிட்ட ஒரு பக்கத்தில் தமிழில் எழுதப்பட்டிருந்த நந்திவாக்கிய பாடல் வரிகளில் சிவப்புக்கோடுகளினால் அடையாளமிடப்பட்டிருந்த வரிகளை சிங்களத்தில் மொழி பெயர்த்து தருமாறு கேட்டார்.அந்த நந்திவாக்கியம்வேறு ஒருவரால் அழகானதமிழில் எழுதப்பட்டிருந்தது நோட்டுப்புத்தகத்தை வாங்கிஅந்த வரிகளை வாசித்தேன். மகாலிங்கம் பொழிப்புரை சொன்னார். தென்னிந்தியாவில் கர்னாடக மாநிலத்துக்கு அருகில் ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு செல்ல வேண்டும். அந்த சாதகர் மட்டுமல்ல அவரது மனைவியும் அந்த கோயிலின் முன்பாகவுள்ள குளத்தில் நீராடிவிட்டு அந்தக் கோயிலில் ஒரு சாந்தி பூசையில் கலந்துகொள்ள வேண்டும். அதனைச் செய்தால் சில தோசங்கள் நீங்கிவிடும்.

நான் மகாலிங்கம் சொன்னதை மொழிபெயர்த்துச் சொன்னேன்.வந்தவர் அதனை குறித்துக்கொண்டார். நோட்டுப் புத்தகத்தை மீண்டும் திருப்பிக் கொடுக்கும்போது மடிக்கப்பட்ட முன்பகுதி பக்கங்களை தற்செயலாக பார்த்துவிட்டேன்.

குறிப்பிட்ட நந்திவாக்கியத்துக்குரிய சாதகரின் பெயர் இப்படி ஆங்கிலத்தில் இருந்தது.

Junious Richard Jayawardena (ஜே.ஆர்.ஜயவர்தனா).

அவர்தான் அச்சமயத்தில் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி.

வந்தவர் ஜனாதிபதியின் அந்த ரங்கச் செயலாளர் என்பதை பின்னர் அறிந்துகொண்டேன். சில நாட்களின் பின்னர் எங்கள் வீரகேசரியில் ஜனாதிபதி தனிப்பட்ட விஜயமாக இந்தியா பயணம் என்ற செய்தி வெளியாகியிருந்தது.



# மனித உரிமைப் பாதுகாப்பின் முன்னேற்றம் ஐ.நா. குழுவினரிடம் அரசு வாக்குறுதி



நவநீதம்பிள்ளை

(புதுடில்லி)

இலங்கையில் மனித உரிமைகள் சூழல் பற்றி மதிப்பிடுவதற்காகவும், படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழுவின் பரிந்துரைகள் இலங்கையில் செயற்படுத்தப்படும் விதத்தில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்காகவும் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகத்தில் ஆசிய பசிபிக், மத்திய கிழக்கு, வடக்கு ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களைக் கவனிக்கும் பிரிவுக்குத் தலைவரான ஹன்னி மெகல்லியும், அந்த உயர்ஸ்தானிகத்தில் சட்டத்தின் மாட்சிமை மற்றும் ஜனநாயகம் ஆகிய விஷயங்களை கவனிக்கும் பிரிவினைச் சேர்ந்த ஆஸ்கர் செல்டர்ஸும் வந்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான பசில் ராஜபக்ஷவை இந்த அதிகாரிகள் ஏற்கனவே சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என இலங்கை அரசு வாக்குறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தகால யுத்தத்துக்குப் பின்னர் இப்பகுதி மக்கள் சமாதானமான அமைதிகரமான வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர் என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்க உதவும் வகையில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதாகவும், அவர்கள் வாழ்வாதாரம் தேட உதவிகள் வழங்கப்படுவதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பிரதிநிதிகளிடம் அமைச்சர் பசில் தெரிவித்துள்ளார்.

படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேணடும் என வலியுறுத்தி ஐ.நா மனித உரிமைகள் மன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தில், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்திடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனைகளை இலங்கை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படிருந்தது.

ஐ.நா. குழுவிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனை பெறுவதற்கு அவசியமில்லை என்று இலங்கை அரசு ஆரம்பத்தில் கூறினாலும், ஐ.நா. குழு இலங்கை வருவதற்கு அரசு பின்னர் உடன்பட்டிருந்தது. இதுவரை மனித உரிமைகள் ஆணையகத் தலைவர் பேட்டி மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்பது தொடர்பாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்திடம் வந்துள்ள முறைப்பாடுகள் பற்றி ஐ.நா. அதிகாரிகள் கேட்டறிந்துள்ளனர்

இலங்கைக்கு எதிராக சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் நிலையில், மனித உரிமைகள் விஷயத்தில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றங்களை வெளியுலகுக்குத் தெரிவிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைக்கு இந்த அதிகாரிகள் சேகரித்துப்போகும் தகவல்கள் உதவும் என இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் டாக்டர் பிரதிபா மஹநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த வருடம் ஜனவரிக்கும் ஓகஸ்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் 37 பேர் காணாமல் போயுள்ளது 19 பேர் வெள்ளை வான்களில் வந்தவர்களால் கொண்டுசெல்லப்பட்டுள்ளது போன்றவை தொடர்பில் தாங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

விசாரணைகள் இன்னும் முடிவடையாத நிலையில் யார் குற்றவாளி என்று எங்களால் கைகாட்டிச் சொல்ல முடியாது என்றும் விசாரணைகள் முடிந்த பின்னர் எல்லா விவரங்களும் வெளிவரும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் பிரதிபா மஹநாம ஹேவா குறிப்பிட்டார்.

## அநாமதேய சொகுசு வாகனங்கள் நாடு முழுவதும் சவாரி

மடக்கிப்பிடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் போலி இலக்கத் தகடுகளுடன் பல சொகுசு ரக வாகனங்கள் நாடு முழுவதிலும் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் முறையாக பதிவு செய்யாது, கராஜ் இலக்கங்களைப் பயன் படுத்தி இந்த வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுளளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை மடக்கிப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## யுத்தக் குற்றங்களை விசாரிக்க நாங்கள் இங்கே வரவில்லை

### ஐ.நா. பிரதிநிதிகள் இப்படிச் சொல்கின்றனர்

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளுக்காக இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இரண்டு விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்யும் நோக்கிலேயே தமது விஜயம் அமைந்துள்ளது என அந்தப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் இநத விஜயம் அமையவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகளான கெதி மெகெலி மற்றும் ஒஸ்கார் சொலிரா ஆகியோர், இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் பிரதிபா மஹானாமஹேவாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கடத்தல்கள் காணாமல் போதல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சில பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## படைத்துறை தொழில் நுட்ப பகிர்வு நியூசிலாந்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு நியூசிலாந்தின் "மசே" பல்கலைக்கழகம் தொழில் நுட்ப உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மேற்படி நியூசிலாந்தின் புகழ் பெற்ற 5000 மாணவர்களைக் கொண்ட மசே பல்கலைக்கழகத்துடன், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது.

இதன்படி, மருத்துவம், பொறியியல், சமூகவியல், கரையோர மற்றும் பேரழிவு முகாமைத்துவம், ஆய்வு அபிவிருத்தி போன்ற பல புதிய துறைகள் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

அத்துடன், இரு பல்கலைக் கழகங்களுக்கு இடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் மாணவர் பரிமாற்றும் செய்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## செஞ்சிலுவைச் சங்கத்தைப் பழிவாங்கியதாக அரசு காலம் கடந்து கசிகிறது தகவல்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புப் படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை பழிவாங்கும் வகையில் நடந்து கொண்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிட்டது என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நிலவி வரும் உறவு தொடர்பில் அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக் வருத்தமடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கை இராணுவத்தினர் பழிவாங்கி வருவதாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் மனிதாபிமான விவகார பிரதிநிதி ஜோன் ஹோல்ம்ஸ் தெரிவித்திருந்தார்.

செஞ்சிலுவைச் சங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக கருதியே படையினர், இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க விரும்புவதாகவும், தேவையில்லையென்றால் குறித்த பிரதேசங்களைவிட்டு வெளியேறத் தயார் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டிருந்தது.

10000 - 15000 விடுதலைப் புலிச சந்தேக நபர்களின் உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் என மற்றுமொரு ஐக்கிய நாடுகள் உயரதிகாரியான லியான் பெஸ்கோ தெரிவித்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தினால் இந்த் குறிப்பு அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டது.

## நம்பிக்கை வைக்க முடியாத இலங்கையின் அரச அதிகாரிகள்

### ரொபேட் ஓபிளேக் இப்படிக் கூறினாரா?

(கொழும்பு)

இலங்கையின் அரச உயர் அதிகாரிகள் எவரையும் நம்ப முடியாது என்று தெற்காசியாவுக்கான பிரதி அமெரிக்கா இராஜாங்க செயலாளர் ரொபட் ஓ பிளெக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியை விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ளது

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர், இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளான ஹோம்ஸ் மற்றும் பெஸ்கோ ஆகியோர் இலங்கை தலைவர்களுடனும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இதன்போது இலங்கையின் சார்பில் எவருமே நம்பி செயற்படும் அளவில் நடந்துகொள்ளவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் ரொபட் ஓ பிளெக்கிடம் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் உரிய தரவுகளை வழங்கவில்லை என்று ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் பிளெக்கிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

அத்துடன் தமிழர்கள் என்ற பெயரை பயன்படுத்தி சிங்கள தேசியவாதிகளின் வாக்குகளைக் கவரும் நடவடிக்கையிலேயே இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ரொபட் ஓ பிளெக், அமெரிக்க இராஜாங்க திணைக் களத்துக்கு அறிவித்துள்ளார்.

## வாகன இறக்குமதி வீழ்ச்சி வரி அதிகரிப்பு காரணம்

(கொழும்பு)

கூடுதலான வரி அறவீடு காரணமாக நாட்டின் வாகன இறக்குமதியில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2012 ஜூன் மாதமளவில் நாட்டின் மொத்த புதிய வாகன பதிவானது 48 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஜூன் மாதத்தில் 2268 புதிய வாகனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன

மத்திய தர குடும்பத்தினரால் வாகமொன்றை கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு வாகனங்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளமையே இதற்கான காரணம்.

அரசாங்கத்தினால் கூடுதல் வரி அறவீடு செய்யப்பட்ட காரணத்தினால் 11 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்ட வாகனம் தற்போது 21 இலட்சமாக உயர்வடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

14 இலட்ச ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட வாகனம் 17 இலட்ச ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகிறது.


NSL
நோத்சீ லிமிடெட்
(வடகடல் நிறுவனம்)
நாட்டின் கடற்றொழில் துறையின் வளர்ச்சிக்கு மகத்தான
சேவையினை வழங்குதல்
செயற்பாடு:
கடற்றொழில் முன்னேற்றத்திற்கு தேவையான வலை·
மற்றும் இதர உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்குவதனுடாக
கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த
அமைக்கப்பட்ட அரச நிறுவனம்.
அரச பொதுக்கம்பனி
எமது தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள்
குருநகர் - யாழ்ப்பாணம். 021 222 2733
லுனுவில - புத்தளம் . 031 225 5272
வீரவல - அம்பாந்தோட்டை. 047 223 9180
தொடர்பாடல் காரியாலயம் - கொழும்பு. 011 434 3345
தலைவர்
பணிப்பாளர்கள்
பொது முகாமையாளர்
நிர்வாகத்தினர்
ஊழியர்கள்

# பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சி
# மானிப்பாய் பெண்கள் கல்லூரி மூன்றாமிடம்

(கண்டி)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் பெண்கள் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி நேற்றைய தினம் கண்டி தேசியக் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் வடமாகாணம் சார்பாக வவுனியா திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையும், மானிப்பாய் பெண்கள் கல்லூரியும் பங்குபற்றின.

இரண்டாமிடத்தை வவுனியா திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையும், மூன்றாமிடத்தை மானிப்பாய் பெண்கள் கல்லூரியும் பெற்று வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்றஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டி யாழ். மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்ந்த மேற்படி பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி., 12)

# உற்சாகத்தில் உசைன் போல்ட்


ஜமேக்காவின் சுற்றுலா வளர்ச்சிக்கு உதவிய உற்சாகத்தில் இருக்கிறார் உலகின் மின்னல் வேக வீரரான உசைன் போல்ட்.

பீஜிங் ஒலிம்பிக்கை தொடர்ந்து லண்டன் ஒலிம்பிக்கிலும் 100 மீ., 200 மீ.,, 4ஓ100 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்று அசத்தினார் ஜமேக்காவின் உசைன் போல்ட்.

பீஜிங் ஒலிம்பிக்கில் உசைன் தங்கம் வென்ற பின் அந்நாட்டு சுற்றுலாத்துறை இவரை வைத்து கடந்த 2010இல் மூன்று விளம்பரப் படம் எடுத்தது. இதனால் 2010இல் சுற்றுலாப் பயணி களின் வருகை 1,922,000 ஆக உயர்ந்தது. இதற்கு முன் அங்கு உள்ள பட்டர்ஸ்காட்ச் பீச்சை காண மட்டுமே சுற்றுலாப்பயணிகள் வருவர்.

இந்த ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியிலும் அசத்திய போல்ட்டை வைத்து, இம்முறையும் விளம்பரப் படங்கள் எடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.


இது குறித்து ஜமைக்காவின் சுற்றுலாத்துறை அமைச்சர் மெக்நில் கூறுகையில்; லண்டன் ஒலிம்பிக்கில் உசைன் போல் டின் சிறப்பான செயற்பாடு, எங்கள் நாட்டிற்கு சுற்றுலாப் பயணி களின் வருகையை அதிகரிக்க உதவும், என்றார்.



மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் பிறையன் லாரா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துள்ளார். மரியாதை நிமித்தமான இச்சந்திப்பு, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. பிறையன் லாராவின் சகோதரி எக்னஸ் ரைசஸ், லாராவின் சகோதரரர் வின்ஸ்டட் யுஸ்டான் ஆகியோரும் லாராவுடன் ஜனாதிபதியைச் சந்தித்தனர். இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய, கடற்படை உப லெப்டினன்ட் ஜோஷித ராஜபகஷ, சுரேஷ் எதிரிசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# பூபதி, போபண்ணா ஜோடிக்கு 2 வருடத் தடை

(சண்டிகர்)



லண்டன் ஒலிம்பிக்கில் சகவீரர்லியாண்டர் பயசுடன் இணைந்து விளையாட மறுத்த இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது.


சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் இரட்டையர் பிரிவு போட்டிக்கான அணித் தேர்வின் போது, பயசுடன் இணைந்து விளையாடமாட்டோம் என இந்தியா வின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா தெரிவித்தனர். இதனால் அதிருப்தி அடைந்த அகில இந்திய ரென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.,), பூபதி மற்றும் போபண்ணாவை டேவிஸ் கோப்பை தொடருக்கான அணியிலிருந்து அதிரடியாக நீக்கி, ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. இதனால் நியூசிலாந்துக்கு எதிரான ஆசிய-ஓசியானா குரூப்-I பிளே-ஒப் சுற்றுக்கான இந்திய அணியில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சண்டிகரில் ஏ.ஐ.டி.ஏ., கூட்டம் நடந்தது. இதில் பூபதி, போபண்ணாவின் தடை காலத்தை இரண்டு ஆண்டுகளாக உயர்த்தியது.


இதன்படி இவர்கள் இவரும் டேவிஸ் கோப்பை மற்றும் தேசிய அளவிளான போட்டிகளில் வரும் 2014 ஜுன் மாதம் வரை பங்கேற்க முடியாது.

தடை குறித்து கருத்துத் தெரிவிக்க மகேஷ் பூபதி, போபண்ணா ஜோடி மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. விருது வென்றோர்



ஒரு நாள் போட்டியில் விருது வென்ற ஹோலி



வளர்ந்து வரும் வீரருக்கான விருது வென்ற சுனில் நரைன்



சிறந்த கிரிக்கெட் உணர்வை வெளிப்படுத்தி விட்டோரி



ஆண்டின் சிறந்த நடுவர் தர்மசேனா

# பிறிமியர் லீக் கால்பந்து வென்ற அணிகள்




இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் போட்டியில் ஆர்சனல், மன்செஸ்டர் யுனைட்டட், அஸ்டன் வில்லா, ஸ்ரீபுல்ஹம் போன்ற அணிகள் வெற்றி பெற்றுக்கொண்டன. நோர்விச் கழகத்திற்கும் வெஸ்ட் ஹாம் யுனைட்டட் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் இரண்டு கழகங்களும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளாமல் விட, போட்டி 0-0 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. ஆர்சனலிற்கும் சௌதம்டனுக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ஆர்சனல் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

போட்டி ஆரம்பித்து 11ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலைப் பெற்றுக்கொண்ட அவ்வணி, முதற்பாதியில் 4 கோல்களைப் பெற்றுக்கொண்டது. சௌதம்டன் கழகம் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டிருந்தது.

இரண்டாவது பாதியில் ஆர்சனல் கழகம் இரண்டு மேலதிக கோல்களைப் பெற்றுக்கொள்ள ஆர்சனல் கழகம் 6 - 1 என்ற கணக்கில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டது. அஸ்டன் வில்லா கழகத்திற்கும் ஸ்வன்சீ கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் அஸ்டன் வில்லா கழகம் வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பித்து 16ஆவது நிமிடத்திலேயே முதலாவது கோலைப் பெற்றுக் கொண்ட அஸ்டன் வில்லா, 88ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பெற்றுக் கொண்டது.ஸ்வன்சீ கழகம் கோலெதனையும் பெற்றுக்கொள்ளாது விட, போட்டியில் அஸ்டன் வில்லா கழகம் 2 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.


ஸ்ரீபுல்ஹாம் கழகத்திற்கும் வெஸ்ட் ப்ரோம்விச் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ஸ்ரீபுல்ஹாம் கழகம் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.இதில் ஸ்ரீபுல்ஹாம் கழகம் 3 - 0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும் விகான் அத்லட்டிக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் இலகுவான வெற்றியைப் பெற்றது. போட்டியின் 6ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்ட்டி வாய்ப்பை அவ்வணி தவறவிட்டதோடு, முதற்பாதியில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் இரண்டாவது பாதி ஆரம்பித்தது முதல் அதிரடியாக விளையாடிய மன்செஸ்டர் யுனைட்டட் 4 கோல்களை இரண்டாவது பாதியில் பெற்றுக் கொண்டது.

இதன் காரணமாக போட்டியை 4 - 0 என்ற கணக்கில் வெற்றிகொண்டது. சன்டர்லான்ட், லிவர்பூல் அணிகளுக்கிடையிலான போட்டியில் சன்டர்லான்ட் கழகம் 29ஆவது நிமிடத்தில் பெற்றுக்கொண்ட கோலுக்குக் பதிலாக 71ஆவது நிமிடத்தில் லிவர்பூல் கழகம் கோலொன்றைப் பெற்றுக்கொள்ள போட்டி 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

# தொடர்ந்து 470 வெற்றிகள்
## மாற்றுத்திறனாளி வீரர் சாதனை



ரென்னிஸ் அரங்கில் தொடர்ந்து 470 வெற்றிகளை பெற்று மிரட்டி வருகிறார் நெதர்லாந்தின் மாற்றுத்திறனாளி வீராங்கனை எஸ்தர் வெர்ஜீர்.

நெதர்லாந்தின் எஸ்தர் வெர்ஜீர், (வயது- 31). இவரது 8 வயதில் முதுகுத்தண்டை சுற்றிய இரத்தக்குழாய்களில் செய்யப்பட்ட ஆபத்தான ச்த்திர சிகிச்சை காரணமாக, உடற்திறன் பாதிக்கப்பட்டது. 1998இல் சர்வதேச வீல் சேர் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்கத் தொடங்கினார்.

இதுவரை 162 ஒற்றையர், 134 இரட்டையர் பட்டம் வென்றுள்ளார் எஸ்தர். இதில் 42 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் (தலா 21 ஒற்றையர், இரட்டையர்) அடங்கும். கடந்த 2003 முதல் தொடர்ந்து 465 வெற்றிகள் பெற்று, இதுவரை தோல்வியடையாத வீராங்கனையாக வலம் வருகிறார்.

லண்டனில் நடந்த பாராலிம்பிக் போட்டியிலும் இவரது வெற்றி தொடர, தொடர்ந்து 470 வெற்றிகள் பெற, நான்காவது முறையாக ஒலிம்பிக் தங்கம் வென்றார். கடந்த 1999இல் இருந்து, 13 ஆண்டுகளாக சர்வதேச தரவரிசையில் முதலிடத்தில் இருந்து வருகிறார்.

இதுகுறித்து எஸ்தர் கூறியது: பாகிஸ்தானைச் சேர்ந்த ஸ்குவாஷ் வீரர் ஜஹாங்கீர் கான், 5 ஆண்டு இடைவெளியில் 555 தொடர்ச்சியான வெற்றி பெற்றுள்ளார். என்னைச் சந்திக்கும் அனைவருமே இதுகுறித்து தான் பேசுகின்றனர். இதனால் கூடுதல் நெருக்கடி ஏற்படுகிறது. பாராலிம்பிக்கில் மீண்டும் தங்கம் வெல்லவேண்டும் என, குடும்பத்தினர், நண்பர்கள் எதிர்பார்த்தனர்.இதற்கேற்ப சாதித்துக் காட்டியதில் மகிழ்ச்சி. அடுத்து ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில் பங்கேற்பேனா என்பது உறுதியாக தெரியாது. ஏனெனில், இடைப்பட்ட நான்கு ஆண்டுகளில் என்ன நடக்கும் என, உறுதியாக கூற முடியாது எனத் தெரிவித்தார்.



வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் மாகாண விளையாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இதன் போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதைக் காணலாம். முதல்நாள் நிகழ்வின் முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் டொனால்ட் நினைவாக நடத்தப்பட்டு வரும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் எதிர்வரும் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டியில் கொக்குவில் கே.சி.சி. 'பி' அணியை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளன.

யாழ். மாவட்ட முன்னணி அணிகள் பல பங்குகொண்ட இப்போட்டித் தொடரில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. 'ஏ' அணியும் பங்குகொண்டன. இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி வெற்றிபெற்றுஇறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இறுதி போட்டி இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத் தொடக்கத்தில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

(எஸ்.பி.)

# அச்சுவேலி ஸ்ரார், ஆவரங்கால் இந்து கரப்பந்தாட்ட கிண்ணம் வென்றன

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அச்சுவேலி ஸ்ரார், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு வைபவமும் கடந்த 10ஆம் திகதி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் "ஏ", "பி" என இரண்டு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் முதலில் நடைபெற்ற 'பி' பிரிவுக்கான இறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், புத்தூர் வளர்மதி அணியும் மோதியது. முதல் சுற்றை அச்சுவேலி ஸ்ரார் அணி 25-22 என்ற நிலையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது. இரண்டாவது செட்டை புத்தூர் வளர்மதி அணி 27-25 என்ற கணக்கில் கைப்பற்றி சமப்படுத்தியது. இருப்பினும் இதன் பின்னர் தமது ஆட்டத்திறனை மாற்றியமைத்து வேகமான ஆட்டமுறையை மேற்கொண்ட அச்சுவேலி ஸ்ரார் அணி 25-23, 25-21 என்ற கணக்கில் மூன்றாவது மற்றும் நான்காவது சுற்றை கைப்பற்றி 3-1 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. இதில் முதல் செட்டை ஆவரங்கால் மத்தி அணி 25-23 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரண்டாவது சுற்றில் அசம்பாவிதம் காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. இறுதியில் 3-1 என்ற கணக்கில் ஆவரங்கால் இந்துஇளைஞர் அணி வெற்றிபெற்றதாகப் போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் கரப்பந்தாட்டத்துறையில் சாதித்த வீர,வீராங்கனைகளுக்குப் பரிசில்கள், விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துரை கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(118, 93)

விளையாட்டு செய்திகள்

# சேவாக் விளக்கம்

துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தவே தலைமைப் பதவியை துறந்தேன் என சேவாக் தெரிவித்தார்.

சம்பியன் லீக் தொடரில் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு அதிகம் இருக்கின்றது. சாதாரண வீரராகக் களமிறங்கும் பட்சத்தில் அதை சாதிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நடைபெற்றுமுடிந்த ஐந்து இந்தியன் பிறிமியர் லீக் தொடர்களில், நான்கில் டில்லி டெயார் டெவில்ஸ் அணியை ஷெவாக் வழிநடத்தியிருந்தார்.

சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

# லோகதீஸ்வர் சிறப்புப் பந்து வீச்சு ஸ்ரான்லியை வென்றது சென்.ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

லோகதீஸ்வரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 3ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணியும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி லோகதீஸ்வரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி 16.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந் 15, சதீஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 12 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 11.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கலிஸ்ரான் 12, கௌரிராஜ் 16, கனமிர்தன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ் 17 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சிறப்பான வெற்றியைப் பதிவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சென்ற வருடம் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் வரை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முன்னேறியமை குறிப்பிடத்தக்கது அதே போன்று இந்த ஆண்டும் முன்னேற வேண்டும் என விளையாட்டு ஆர்வலர்கள் வாழ்த்துகின்றனர். (எஸ்.பி.)



வடமாகாணப்பாடசாலைமாணவர்களுக்கிடையேகல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டது. கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை வடமாகாணத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி தொடர்ச்சியாக முதலிடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கல்லூரி அதிபர் என். தெய்வேந்திரா, பிரதி அதிபர் கே. அருளானந்தம், அணிப் பொறுப்பாசிரியர், விளையாட்டுப் பயிற்றுநர் ஆகியோருடன் முதலிடம் பிடித்த வீரர்கள் நிற்பதைக் காணலாம். (01)

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்து இறுதியில் பருத்தித்துறை, கரவெட்டி

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் கரவெட்டிப் பிரதேச செயலகம் ஆகிய அணிகள் தகுதிபெற்றன.

யாழ். மாவட்ட நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பணியாளர்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலுச் சந்தியில் அமைந்துள்ள மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணைப் பிரதேச செயலக அணி மோதியது. இதில் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை வெளிப்புடுத்தி கரவெட்டி பிரதேச செயலக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும், மருதங்கேணி பிரதேச செயலக அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும்வகையில் ஆடி வந்தன. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளாலும் கோல் எவையும் அடிக்கப்படவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை வகித்தது.

தொடர்ந்து இரு அணிகளாலும் மேலும் கோல் போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அது இறுதி வரை கைகூடவில்லை. முடிவில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் பேரட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள்தெரிவித்தனர்.(எஸ்.பி.)

# கலைஞர் முதல் வலைஞர் வரை







சமூக வலைத்தளங்கள் நம் வாழ்வின் அத்தியாவசிய மாகி ரொம்ப காலம் ஆகிறது. சமூக உளவியலில் அது ஏற்படுத்தும் பாதிப்பும் அதிகரித்து வருகிறது. தொலை பேசி, மின்னஞ்சல், வலைத் தளம், ட்விட்டர், ஃபேஸ்புக் என்று தகவல் தொழில்நுட்பத் துறை தொட்டுள்ள உயரம் அசாதாரணமானது.

ட்விட்டர் என்பது ஒரு சுவாரஸ்யமான சமூக வலைதளம். அதில் ட்வீட் என்பது ஒரு படைப்பு. ஒரு ட்வீட்டில் 140 எழுத்துக்களுக்கு மட்டுமே அனுமதி. அந்த வரையறைக்குள் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும். ட்விட்டர் வலைதளம் 2006இல் ஜேக், எவான் என்ற இருவரால் தொடங்கப்பட்டது. இன்று உலகம் முழுக்க சுமார் 50 கோடி பேர் ட்விட்டரில் கணக்கு வைத்துள்ளனர். அதாவது உலகில் 14 பேரில் ஒருவர் ட்விட்டர் பயன்படுத்துகிறார்.

ஃபேஸ்புக்கில் ப்ரொஃபைல் அல்லது பேஜ் உருவாக்கலாம். முக்கியமாக, புகைப்படங்கள் இதில் பரவலாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஃபேஸ்புக் தளத்தை 2004இல் மார்க் சூக்கர்பெர்குடன் இணைந்து ஐந்து பேர் தொடங்கினார்கள். உலகம் முழுக்க 96 கோடி பேர் ஃபேஸ்புக் கணக்கு வைத்திருக்கின்றனர்.

"இந்த ஊடகத்தை நான் இதுவரை பயன் படுத்தியதில்லை. அதனால் இது குறித்த பதட்டமும், சந்தேகமும் இருக்கிறது. ஆனால் அதைத் தாண்டி உங்களோடு பேச, விஷயங்களைப் பகிர இப்போது இங்கே வந்திருக்கின்றேன்... இரு மாதங்களுக்கு முன்பு, தனது அதிகாரபூர்வ ஃபேஸ்புக் பக்கத்தை அறிமுகப்படுத்தி கமல்ஹாசன் பேசியது இது.

இன்று கிட்டத்தட்ட எல்லாத் துறை பிரபலங்களும் ஏதாவதுவொரு சமூக வலைத் தளத்தில் இருக்கிறார்கள். தம்முடைய ரசிகர்களுடன், வாசகர்களுடன், தொண்டர்களுடன் நேரடியாகப் பேசுகிறார்கள். தகவல்களை, கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தீவிரமாக ட்விட்டரில் இயங்குகிறார். அரசியல் கருத்து, கலை விமர்சனம், வாழ்த்து, அஞ்சலி என நிறையவே பகிர்ந்துகொள்கிறார். குஜராத் முதல்வர் நரேந்திர மோடியும் ட்விட்டரில் மிகத் தீவிரமாக இயங்குகிறார். பங்களாதேஷைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரின், ட்விட்டரில் பெண்ணிய ஆதரவுக் கருத்துக்களைத் தொடர்ச்சியாக அளித்து வருகிறார். "முதலில் நான் ஒரு மனுஷி. என் யோனி என்பது இரண்டாம் பட்சம் தான். அதைக்கொண்டு என்னைத் தீர்மானிக்கலாகாது." இது அவருடைய சமீபத்திய ட்வீட்களில் ஒன்று.

கவிஞர் வைரமுத்து மாதமொருமுறை தன் ட்விட்டர் பக்கத்தின் மூலம் தன் வாசகர் களுடன் உரையாடுகிறார். அவர்களுடைய கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கு, விமர்சனங் களுக்குப் பதிலளிக்கிறார். இதை "எழுத்தாடுதல்" என்று குறிப்பிடுகிறார். பிரபலப் பின்னணிப் பாடகிகள் ஸ்ரேயா கோஷல், சின்மயி இருவரும் ட்விட்டரை அதிகம் பயன்படுத்துபவர்கள்.

"இசை ஞானி" இளையராஜா குடும்பத்தின் இளைய தலைமுறையினர் எல்லோரும் ட்விட்டரில் இருக்கின்றனர். இவர்களுக்குள் அவ்வப்போது சுவாரஸ்யமான உரையாடல்களும், கருத்துப் பரிமாற்றங்களும் நடக்கின்றன. இளம் நடிகர்கள், இசையமைப் பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், இயக்குநர்கள் எல்லோருமே ட்விட்டரில் வலம் வருகிறார் கள். நடிகர் ரா.பார்த்தீபன் தனக்கே உரிய வித்தியாசமான, சுவாரஸ்யமான வெளிப்பாட்டு உத்திகளுடன் ஃபேஸ்புக்கில் வலம் வலம் வருகிறார். திரையுலகப் பிரமுகர்களுக்கு இணையாக வெகுஜன எழுத்தாளர்களும், நவீன இலக்கியவாதிகளும் சமூக



இணையதளங்களில் தீவிரமாக செயல்படுகின்றனர்.

மனுஷ்ய புத்திரன் தன் ஃபேஸ்புக் பக்கத்தில் சமகால நிகழ்வுகள் குறித்து அவ்வப் போது பகிடி கலந்து எழுது கிறார். சாரு வாசகர் வட்டம் என்ற குழுமம் ஃபேஸ்புக்கில் இயங்கி வருகிறது. தான் எந்தவொரு சமூக வலைதளத்தி லும் இல்லை, தன் பெயரில் தொடங்கப்பட்டிருக்கும் எந்தக் கணக்கும் தன்னுடையதல்ல என்று சமீபத்தில் அறிக்கை விட்டார் ஜெயமோகன். எஸ். ராமகிருஷ்ணனும் இதுவரை எந்தச் சமூக வலைதளத்திலும் கணக்கு வைத்துக்கொள்ள வில்லை. ஃபேஸ்புக்கில் இருக்கும் ஞாநி அவ்வப்போது அங்கே சில தீவிரமான விவாதங்களை நிகழ்த்துகிறார். எழுத்தாளர் பா.ராகவன் தனது ட்வீட்களை "குற்றியலுகரம்" என்ற தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார்.

பிரபலங்கள் சமூகவலைத் தளங்களுக்கு வருவது ஒரு பக்கம். சமூக வலைத்தளங்கள் மூலம் பிரபலமானவர்கள் இன்னொரு பக்கம். சமூக வலைத்தளங்களில் இருந்து சிறந்த விஷயங்களைத் தேர்ந்தெடுத்து பிரபல பத்திரி கைகள் வெளியிடுகின்றன. ஆனந்த விகடனில் "வலைபாயுதே", குங்குமத்தில் "வலைப்பேச்சு", குமுதம் ரிப்போர்ட்டரில் "ஆன்லைன் ஆப்பு", அவள் விகடனில் "நெட் டாக்ஸ்" போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ஹெட்லைன்ஸ் இந்தியா தளம் அறிவித்த விருதுகளில் இந்திய அளவில் சிறந்த ட்வீட்டராக மதன் கார்க்கி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கவிஞர் வைரமுத்துவின் மகன். இவரும் பாடலாசிரியர். 6,300 பேருடன் தமிழில் அதிகம் ஃபலோயர்கள் கொண்ட ட்வீட்டர் இவர். பலரைச் சென்று சேர்வதுதான் பெரிய ப்ளஸ். எனது பாடல் வகை (genre) பிரிப்பு திட்டத்தின் போது ட்விட்டரில் 800 பேர் பங்களித்து உதவினார்கள். இன்று ஒரு பாடல் வெளியானால் உடனடியாக 2500 - 3000 பேர் அது குறித்து கருத்துகள் சொல்கிறார்கள். அடுத்தடுத்த



- சி. சரவண கார்த்திகேயன்.

வேலைகளில் நம்மைச் சரி செய்து கொள்ள எதிர்வினைகள் உதவுகின்றன என்கிறார்..

அரட்டைகேர்ள் என்ற பெயரில் எழுதி வரும் கோவையைச் சேர்ந்த சௌம்யா ஒரே ஆண்டில் 16,700 ட்வீட் போட்டு 4,700 ஃபலோயர்களைப் பெற்றிருக்கிறார். தமிழ் ட்வீட்டர்களில் மிக அதிக ஃபலோயர்கள் கொண்ட பெண் இவர்தான். ட்விட்டருக்கு வந்த பின்புதான் எனக்கும் சுமாராக எழுத வரும் என்பதைப் புரிந்து கொண்டேன். நம் கருத்துகள் துரிதமாக மற்றவர்களைச் சென்றடைந்துவிடுவது, நன்மை. சமூக வலைத்தளம் நம்மை அடிமைப்படுத்திவிடும் என்பது தீமை. காலவிரயத்தை கண்கூடாக உணர்ந்தாலும், மீள முடிவதில்லை என்கிறார் சௌம்யா.

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் பல பிரபலங்கள் சமூக வலைத்தளத்தில் காலடி எடுத்து வைத்த வண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், பல புதிய பிரபலங்கள் சமூக வலைத்தளத்தால் உருவாகிக்கொண்டும் இருக்கிறார்கள்.

---


என்னதான் இந்த The Words ஹொலிவுட் படத்தின் ஸ்டில்ஸ் ரொமான்ஸ் படம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும் விஷயம் காதல்

# 'அவதார்' நாயகியின் அடுத்த படம்!

- கே.என்.சிவராமன் -

அல்ல. கதை திருட்டு.

ரோரி ஜென்சன், வளர்ந்து வரும் இளம் நாவலாசிரியன். கொஞ்சப் பேர்தான் இவனது கதைகளை படித்திருக்கிறார்கள். ஆனால், ஒட்டு மொத்த அமெரிக்காவும் தன் எழுத்தை கொண்டாட வேண்டும் என்பது தான் இவனது கனவு, இலட்சியம்.




அதற்காகத்தான் தொடர்ந்து நாவல்களை எழுதிக் கொண்டிருக்கிறான். ஆனாலும், புகழ் வெளிச்சம் கண்காணா தொலைவில் இருந்தபடிதான் கண்ணாமூச்சி ஆடுகிறது.

குடும்ப வாழ்க்கை பழுதில்லை. சொல்லப் போனால், கொடுத்து வைத்த வாழ்வு. அருமையான மனைவி. என்றேனும் ஒரு நாள் தன் கணவன் ஜெயிப்பான் என தீவிரமாக நம்பும் காதலியே மனைவியாக அமைந்தது கொடுப்பினைதானே? கன்வை நினைவாக்கவும், இலட்சியத்தை நிறைவேற்றவும், தொடர்ந்து ரோரி ஜென்சன் போராடுகிறான். மனைவி அதற்கு உறுதுணையாக நிற்கிறாள்.

ஒரு நாள்



எதேச்சையாக பழம் பொருட்களை விற்பனை செய்யும் கடைக்கு செல்கிறான். அங்கிருக்கும் பொருட்களை சும்மா நோட்டமிட்டவனின் பார்வையில் ஒரு பெட்டி படுகிறது. அதன் அழகு அவனை ஈர்க்கவே எடுத்து திறந்து பார்க்கிறான். உள்ளே ஒரு ஃபைல். அதைப் பிரித்தால், உடையும் தறுவாயில் இருக்கும் பழுப்பு நிற காகிதக் குவியல் கண் சிமிட்டுகிறது. அந்தக் காகிதத்தில் அப்படி என்னதான் எழுதப்பட்டிருக்கிறது என்று படித்துப் பார்க்கிறான்.

அதிர்ச்சியும், ஆச்சர்யமும் ஒன்றுசேர தாக்குகின்றன. அது ஒரு நாவல். வாக்கிய அமைப்பும், சொல்ல வந்த விஷயமும் ரோரி ஜென்சனை பிரமிப்பில் ஆழ்த்துகின்றன. உடனே அந்தப் பெட்டியை விலைக்கு வாங்கி, வீட்டுக்கு வருகிறான். மனைவி வெளியே சென்றிருக்கிறாள்.


தன் கணினியின் முன்னால் அமர்ந்து, அந்த நாவலை தட்டச்சு செய்ய ஆரம்பிக்கிறான். நாவலில் இருக்கும் வார்த்தைகளும், வாக்கியங்களும் தன் விரல்களின் வழியாக கணினியில் பதிவாவதை பார்த்து மகிழ்கிறான். கணினியின் முன்னால் அமர்ந்து தன் கணவன் மும்முரமாக எழுதிக் கொண்டிருப்பதை பார்த்து அவளுக்கு ஏக மகிழ்ச்சி. அருகில் வருகிறாள். இவனை ஆதரவாக அணைத்தபடி கணினியின் திரையில் மின்னும் வாக்கியங்களை படிக்க ஆரம்பிக்கிறாள்.

அவளால் நம்பவே முடியவில்லை. தன் கணவனுக்குள் இவ்வளவு திறமையா? அப்படியே சொக்கிப் போகிறாள். மனைவியின் கண்களில் வழியும் காதலை பார்க்கப் பார்க்க இவனுக்கு பயம் வருகிறது. அது, தான் எழுதிய கதையில்லை என எப்படி சொல்வது என திகைக்கிறான். மனைவியின் மகிழ்ச்சியைக் கெடுக்க மனமில்லாமல், அது தான் எழுதி வரும் நாவல் என பொய் சொல்கிறான்.

அந்தப் பொய் தொடர்கிறது. பழைய பெட்டியில் இருந்த யாரோ எழுதிய நாவல், இவன் பெயரில் புத்தகமாக வெளிவருகிறது. அமெரிக்காவே இவனை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகிறது.

சரியாக அப்போது பார்த்து ஒரு வயதானவர், இவனைத் தேடி வருகிறார். இவன் பெயரில் வந்திருக்கும் நாவல், தான் எழுதியது என்று சொல்கிறார். இதன் பிறகு என்ன நடக்கிறது என்பதை படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

"ஹாங் ஓவர்", "லிமிட்லெஸ்" உட்பட ஏராளமான படங்களில் நடித்திருக்கும் ப்ராட்லி கூப்பர், இளம் நாவலாசிரியனாக நடித்திருக்கிறார். நிஜ வாழ்வில் இவருக்கு காதலியாக இருப்பவரும் "அவதார்" பட நாயகியுமான ஜோ சல்டானா, இந்தப் படத்தில் நாயகியாக நடித்திருக்கிறார். எனவே காதல் காட்சிகள் தத்ரூபமாக இருக்கின்றன!



எழுதி இயக்கியிருப்பவர் ப்ரையன் க்ளுக்மேன் மற்றும் லீ ஸ்ட்ரென்தல் ஆகிய இரட்டையர்கள். இருவருக்கும் இதுதான் இயக்குநராக முதல் படம்.

# சினிமா சினிமா

➤ "விஸ்வரூபம்" படத்துக்குப் பிறகு கமல்ஹாசன், ஹொலிவுட் படத்தை இயக்கி நடிப்பார் எனக் கூறப்பட்டது. முழுமையான கதையைத் தயாரிக்க இன்னும் அதிக காலம் ஆகும் என்பதால் அதற்கிடையில் ஒரு நகைச்சுவைப் படத்தில் நடிக்கிறார் கமல். "பஞ்சதந்திரம்" பாணியில் கதை தயாராகிவிட்டது. வசனங்களைப் பட்டை தீட்டிக்கொண்டிருக்கிறார் கிரேஸிமோகன்.



➤ விஷ்ணுவர்தன் இயக்கத்தில் அஜித், நயன்தாரா, ஆர்யா நடிக்கும் புதிய படத்தில் பார்த்தீபனின் மகளும் "கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவருமான கீர்த்தனா உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார்.

➤ பாலாவின் "அவன் இவன்" படத்தில் அறிமுகமான ஜனனி ஐயருக்கு ஶ்ரீகாந்த்துடன் நடித்துள்ள "பாகன்" படம் மட்டுமே கைவசம் உள்ளது. "கிளாமராக நடிக்கமாட்டேன்" என்று கூறியதே வாய்ப்புகள் வராததற்கு காரணம் என்பதை அறிந்துகொண்ட ஜனனி, தற்போது அந்தக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார். அவருடைய சமீபத்திய அறிவிப்பு: "கதைக்குத் தேவை என்றால் கிளாமராக நடிப்பதில் தவறில்லை".



➤ கே.பாலசந்தர் இயக்கத்தில் கமல், சுஜாதா, ஜெய்கணேஷ் நடித்து 1974ஆம் ஆண்டு வெளிவந்த படம் "அவள் ஒரு தொடர்கதை". அப்போது மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதே படத்தை 1976ஆம் ஆண்டு "அந்துலேனி கதா" என்ற பெயரில் தெலுங்கில் இயக்கினார் பாலச்சந்தர். இதில் கமல் தமிழில் நடித்த அதே பாத்திரத்தில் நடித்தார். சுஜாதா கதாபாத்திரத்தில் ஜெயப்ரதாவும் ஜெய்கணேஷ் கதாபாத்திரத்தில் ரஜினியும் நடித்திருந்தனர். அங்கும் இந்தப் படம் பெரிய வெற்றி. இப்போது இந்தப் படத்தை "கடவுள் அமைத்து வைத்த மேடை" என்ற பெயரில் டப்பிங் செய்து வெளியிடவுள்ளனர். "அவள் ஒரு தொடர்கதை" பார்த்த படம்தான் என்றாலும் தெலுங்கில் ரஜினி நடித்திருப்பதால் தமிழ் ரசிகர்களிடம் மீண்டும் வெற்றிபெறும் என்ற கணக்கில் படத்தை வெளியிடவுள்ளனர்.




➤ இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி நடித்த "நான்" படத்துக்குக் கிடைத்துள்ள வரவேற்பு அந்தப் படக்குழுவுக்கு உற்சாகத்தை அளித்துள்ளது. இதையடுத்து "திருடன்" என்ற பெயரில் ஒரு புதிய படத்தில் நடிக்கவுள்ளார் விஜய் ஆண்டனி. படத்தின் தயாரிப்பாளரும் இசையமைப்பாளரும் அவரே.

➤ ஷங்கரின் உதவியாளர் பிரபுராஜ சோழன் இயக்கும் "கருப்பம்பட்டி" படத்தில் வரும் "நாட்டி ராஜா ராஜா..." என்ற துள்ளல் பாடலை பிரபல ஹிந்தி இசையமைப்பாளர் பப்பிலஹரி பாடியுள்ளார். இணையத்தளங்களைக் கலக்கி வரும் இந்தப் பாடலை அபிஷேக் பச்சன் கேட்டு, பரவசப்பட்டு பப்பிலஹரியை பாராட்டியுள்ளார். அத்துடன் தயாரிப்பாளரைத் தொடர்பு கொண்டு அந்தப் பாடலைத் தன்னுடைய படத்தில் பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றுள்ளார்.

➤ தெலுங்கில் நிறையப் படங்கள் இருந்தும், பாலிவுட்டில் அஜய்தேவ்கனுடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் தமன்னா. அப்படத்தில், இதுவரை எந்தத் தென்னிந்தியப் படங்களிலும் நடிக்காத அளவுக்கு, அதிரடி கிளாமர் ஹீரோயினாக களமிறங்குகிறார். முதல் படத்திலேயே முத்திரை பதிக்க வேண்டும் என்பதற்கே இந்தப் பிரவேசம்.



## வாழக்கூடிய பல கிரகங்கள் இருக்க வாய்ப்பு



மனிதர்கள் வாழத் தகுதியுள்ள பல கிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவை மிக வெப்பமாகவும், மிகக் குளிராகவும் உள்ளன. அவற்றின் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பதும் தெரியவந்துள்ளது. அவை உறைந்த நிலையிலும், திரவ நிலையிலும் உள்ளன. கிரகங்களின் மேற்பரப்பில் உறைந்து கிடக்கும் தண்ணீர் அங்குள்ள நட்சத்திரங்களின் நேரடி வெப்பத்தின் மூலம் உறைந்து அங்கு நிலத்தடி நீராக வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேலும், இது குறித்து இங்கிலாந்தில் உள்ள அபர்தீன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன்பர்னீல் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அங்குள்ள, நிலத்தடி நீரில், பூமியில் இருப்பதைப் போன்று நுண்ணுயிர் உயிரினங்கள் வாழும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். உயிரினங்கள் தண்ணீர் மூலம் தோன்றி பரிணாம வளர்ச்சி பெற்று மனிதனாக மாறியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதன்படி பார்த்தால் தண்ணீர் இருக்கும் பல புதிய கிரகங்களில் அயல் கிரகவாசிகள் இருக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## பயம்



நள்ளிரவு நேரம். திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட தாய் பக்கத்தில் தன் மகன் இல்லாததைக் கண்டு துணுக்குற்றாள்.

பல இடங்களில் தேடி இறுதியில் குளக்கரையில் கண்டாள்.

"தனியாக நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்றாள்.

"நிலவொளியில் மீன்கள் துள்ளி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்"

"உனக்குப் பயமாக இல்லையா?"

"பயமென்றால் என்ன அம்மா?" என்றான் எட்டு வயதே நிரம்பிய அந்தச் சிறுவன்.

அந்த சிறுவன்தான் பிற்காலத்தில் சரித்திரத்தில் இடம் பெற்ற மாவீரன் நெப்போலியன்.

# சிரியா: அடுத்த பலி?



சிரியாவின் வரலாறு பல நாகரிகங்களை உள்ளடக்கியது. கி.மு. 3000இல் சிரியா, எப்ளா (Ebla) எனும் நாகரிகத்தின் முக்கிய பிறப்பிடமாக இருந்தது. எகிப்தியர்கள், சுமேரியர்கள், அசிரியர்கள், பாபிலோனியர்கள் எனப் பலரும் எகிப்தைக் கைப்பற்றி ஆட்சி செய்திருக்கிறார்கள். பின்னர் பாரசீகர்களாலும் ஆளப்பட்டது. கி.பி. 640இல் இஸ்லாமியர்களால் கைப்பற்றப்பட்டு உமையத் வம்சாவழியினராலும் பின்னர் அபாசித் வம்சாவழியினராலும் (கி.பி. 750) இறுதியாக பிரெஞ்சுக்காரர்களாலும் ஆளப்பட்டு 1946இல் சுதந்திரம் பெற்று, எகிப்தின் ஒரு பகுதியாக இருந்தது. 28 செப்ரெம்பர் 1961 அன்று ஐக்கிய அரபு குடியரசால் சிரியா சுதந்திர நாடாக உருவானது.

1970இல் இருந்து இன்றுவரை பாத் (Ba'ath) என்னும் கட்சியால் சிரியா ஆளப்பட்டு வருகிறது. 1967இல் எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான போரில் எகிப்துடன் இணைந்து சிரியாவும் இஸ்ரேலைத் தாக்கியது. இப்போரின் தோல்வியால் சிரியா நாட்டிடமிருந்து கோலன் ஹைட்ஸ் என்ற இடத்தை இஸ்ரேல் கைப்பற்றியது.

அக்டோபர் 1973இல் மீண்டும் சிரியா இஸ்ரேலிடம் தோற்றது. கோலன் ஹைட்ஸை கைப்பற்ற முடியவில்லை. 1970 தொடங்கி 2000 வரை 30 ஆண்டுகள் ஹ.்.பிஸ் அல் அசாத் ஆட்சி செய்தார். அவருடைய மரணத்துக்குப் பிறகு அவர் மகன் பசார் அல் அசாத் இன்று வரை ஆண்டு வருகிறார். ஒரு கட்சி, ஒரு ஆட்சிமுறை கொண்ட நாடு அது.

2011இல் அராபிய வசந்தம் துனீசியாவில் தொடங்கியது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எகிப்தில் ஆட்சி புரிந்த முபாரக்கைத் துரத்தியது. லிபியாவில் கடாபியை அகற்றியது. இந்த அராபிய வசந்தத்தின் தாக்கம் தான் சிரியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போர். 2011 தொடங்கி 17 மாதங்களாக சிரியாவில் போர் நடைபெற்று வருகிறது. இதுவரை மொத்தம் 21,000 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் அகதிகளாக அண்டை நாடுகளுக்குக் குடிபெயர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அதிபர் அசாத் மற்றும் அவருடைய ஆட்சிக் குழுவினர் அலாவைட் (Alawite) என்னும் இஸ்லாமிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 12% தான். சன்னி இஸ்லாமியர்களின் எண்ணிக்கை 75%. ஒருவகையில் சிரியாவில் இப்போது நடைபெறும் உள்நாட்டுப் போர் இந்த இரு பிரிவினருக்கும் இடையில் நடைபெறும் போர் என்றும் சொல்லலாம்.

சிரியாவில் நடைபெறும் மோதல்களை அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் கண்டித்துள்ளன. ஐரோப்பிய யூனியன், ஐ.நா, அரபு லீக் ஆகிய அமைப்புகளும் பல மேற்கத்தேய நாடுகளும் சிரியாவில் நடைபெறும் வன்முறை மோதல்களையும் அரசின் செயலின்மையையும் கண்டித்துள்ளன. சென்ற மாதம் 16ம் தேதி, இஸ்லாமிய கூட்டமைப்புக் கழகத்தில் இருந்தும் சிரியா வெளியேற்றப்பட்டுள்ளது. சிரியா மீது தடையுத்தரவுகள் விதிக்கவேண்டும் என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டுவந்தபோது, சீனாவும் ரஷ்யாவும் சிரியாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. தடையுத்தரவும் முறியடிக்கப்பட்டது.

இந்தியா, சிரியாவுக்கு எதிராக வாக்களித்தது. சிரியாவின் அண்டை நாடுகளான லெபனான், துருக்கி, ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகளில் பயமும் பதற்றமும் அதிகரித்துள்ளன. அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தற்கொலைத் தாக்குதல்களே அதற்குக் காரணம். ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச்செயலாளரும் சிரியாவுக்கான அமைதித் தூதருமான கோபி அன்னான் சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஆறு அம்சத் திட்டம் ஒன்றை முன்மொழிந்தார். ஆனால் அது நிறைவேறாததால் அவர் ராஜினாமா செய்துவிட்டார். அல்ஜீரிய நாட்டின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் லக்டார் பிராமி (Lakdar Brahimi) புதிய தூதராகப் பொறுப்பேற்றுள்ளார்.

சிரியாவின் எதிர்காலம் என்ன? அமைதிப் பேச்சுவார்த்தைகள் கைகொடுக்குமா? லிபியாவைப் போலவே சிரியாவில் பசார் அல் அசாத்தும் முறியடிக்கப்படுவாரா? சீனாவும் ரஷ்யாவும் சிரியாவோடு கைகோர்த்து நிற்பதால், அமெரிக்கக் கழுகு இன்னும் கீழிறங்காமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து மேலேயே வட்டமிட்டபடி இருக்கிறது.



# அறப்பிழை: பாட்டி சுட்ட வடை

- கருணாகரன்

01

பாட்டி வடை சுட்ட கதையை யார் முதலில் உருவாக்கினார்களோ தெரியாது. ஆனால் தலை முறை தலைமுறையாக அந்தக் கதை சொல்லப்படுகிறது.

அந்தக் கதையைக் கேட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கை முழுதும் அதை மறப்பதில்லை. அது வேடிக்கையும் சுவாரஷியமும் நிரம்பிய இள வயதுக் கதை. அறவிழிப்புக் கதைகளில் அது முக்கியமான ஒன்று. ஆனால், அறவிழிப்பைப் பிரதானப்படுத்தி யாரும் அந்தக் கதையைச் சொல்வதும் இல்லை. அப்படி அதைக் கேட்பதும் இல்லை.

நரி. இங்கே நரி தனனுடைய மூளையின் உழைப்பைப் பயன்படுத்துகிறது. அதாவது தந்திரம் செய்கிறது; புத்திசாலித்தனமாகச் செயற்படு கிறது. அதனால் அதனுடைய புத்திசாதுரியமே அதற்கு வடையைப் பெற்றுக் கொடுக்கிறது.

ஆகவே, நரியின் புத்திசாலித்தனம் இங்கே மதிப்பைப் பெறுகிறது.

ஆனால், அது எத்தகைய அடிப்படையைக் கொண்டது, எத்தகைய அறத்தைச் சாராம்சமாகக் கொண்டது என்று கதையில் சொல்லப்படவில்லை. கதையைச் சேர்ந்தியங்குவோரின் மனதிலும் இது குறித்த கேள்விகள் உருவாக இல்லை. இது துயரமான ஒரு நிலையே.

தந்திரங்கள் நிறைந்த புத்திசாலித்தனம் லௌகீக வாழ்க்கையின் பிரதான அடிப்படைகளில் ஒன்று. தந்திரங்கள் நிறைந்த புத்திசாலித் தனமே இந்த உலகத்தில் லௌகீக வாழ்க்கைக்கு உதவும் என்பது பொது வெளியின் பெரு நம்பிக்கை. ஆகவே புத்திசாலித்தனத்தை மையப் படுத்தியவாறு இந்தக் கதையை அணுகுவதில் என்னதான் குற்றங்கள் உண்டு என்று பலரும் சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள். இந்தத் தந்திரமே வளர்ந்து பிறகு அரசியலிலும் இராஜதந்திரமாகியிருக்கிறது போலும். இந்தத் தந்திரத்துக்கு ஒரு அற நியாயத்தை வழங்கும் முலாமே இராஜதந்திரம் என்ற வரைவிலக்கணமாகும்.

எனினும் அறத்தை விலகிய இராஜதந்திரம் ஒரு போதுமே மனித குலத்தை ஈடேற்றுவதில்லை.

ஆனால், வாழ்க்கையின் ஓட்டம் எப்போதும் அறத்தின் அடிப்படையில், அந்த ஈரலிப்பிற்தான் வேர்கொண்டியங்குகிறது. இதை நாம் பல வேளை களிலும் மறந்து விடுகிறோம். அல்லது அதை அப்படி உணரத் தவறி விடுகிறோம்.

ஆனால், இந்தக் கதையில் காகத்தின் தவறான செயலுக்குக் கிடைத்த ஏமாற்றம் அல்லது படிப்பினையே கதையின் சாரம் என்று படுகிறது. அறப்பிழை ஒன்று எவ்வாறாயினும் நீடித்த வெற்றியைத் தராது, முழுமையான வெற்றியாக அமையாது என்பது தெளிவாக உணர்த்தப்படுகிறது.

> காகத்தின் தவறான செயலுக்குக் கிடைத்த ஏமாற்றம் அல்லது படிப்பினையே கதையின் சாரம் என்று படுகிறது. அறப்பிழை ஒன்று எவ்வாறாயினும் நீடித்த வெற்றியைத்தராது, முழுமையான வெற்றியாக அமையாது என்பது தெளிவாக உணர்த்தப்படுகிறது

இதற்கு மாறாக, நரியின் தந்திரத்தைப் பிரதானப்படுத்தி, அதனுடைய புத்திசாலித்தனத்தைக் குவியப்படுத்தியே இந்தக் கதை சொல்லப்படுகிறது.

பாட்டிக்கு ஏற்பட்ட பாதிப்பை விட காகத்திடமிருந்து வடையைப் பறித்துக் கொண்ட நரியின் தந்திரத்தையும் அதனுடைய கெட்டித்தனத்தையும் குறிப்பிட்டுக் காட்டுவதே கதை சொல்லிகளின் நோக்கம். ஆகவே, அவர்கள் அதைக் குறித்தே சிந்திக்கிறார்கள். என்பதால், இந்தக் கதையில் - கதையினுள்ளே நிகழ்ந்திருக்கும் - நிகழ்ந்து கொண்டிருக்கும் அற விழ்ச்சியைப் பற்றி அவர்கள் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள்.

எனவே இங்கே பாட்டி வடை சுட்ட கதை, அல்லது பாட்டியிடமிருந்து வடையைக் காகம் பறித்துச் சென்ற கதை, அல்லது காகத்திடமிருந்து தந்திரமாக நரி வடையைப் பறித்த கதை என்பது வெளிப்பார்வையில் நரியின் புத்திசாலித்தனத்தைச் சொல்லும் கதைதான்.

காட்டு விலங்குகளில் அதிபுத்திசாலித்தனமும் தந்திரமும் உடையது நரி என்பது பொதுவான அபிப்பிராயம். அதை மேலும் நிரூபிக்கும் நோக்கில் இந்தக் கதை சொல்லப்படுகிறது. புத்திசாலித்தனத்தின் வீரியத்தை இயம்புதலே இங்கே குவியம். புத்திசாலித்தனத்தின் மூலம் காரியங்களை வெற்றியாக்கலாம் என்ற சிந்தனையை - அந்த நோக்கை உருவாக்குவதே இதன் அடிப்படை. வணிகமயமாகிய உலகில் வெற்றியே முதன்மையானதாகும். அதுவே அவசியமானது. ஆகையால் வெற்றிகளின் மூலமே வாழ்வை ஸ்தாபிக்கலாம் என்பது பொது நம்பிக்கையாகிறது. ஆனால், இந்த வெற்றிகள் எத்தகைய அடிப்படைகளைக் கொண்டவை என்பதைப் பலரும் அறிவதில்லை. தவறான அடித்தளங்களைக் கொண்ட எத்தகைய வெற்றியும் நீடித்திருப்பதில்லை. அவை அதிக பிரகாசத்தைக் காட்டும் மின்னல் போலத் தோற்றம் தரும் தற்காலிக வெற்றிகளே.

பாட்டியிடமிருந்து வடையை அபகரித்த காகம் முதலில் வெற்றியைப் பெறுகிறது. இப்போது காகத்திடம் வடையுண்டு. ஆனால், அது மின்னலைப்போலக் கணநேரத்திற்கு மட்டுமேயான வெற்றி. அடுத்த சில கணங்களில் அந்த வடை நரியிடம் போய்ச் சேருகிறது.

> பாட்டியிடமிருந்து வடையைப் பறித்த காகத்தை தந்திரத்தின் மூலம் ஏமாற்றிவிடுகிறது நரி. தந்திரங்கள் நிறைந்த புத்திசாலித்தனமே இந்த உலகத்தில் லௌகீக வாழ்க்கைக்கு உதவும் என்பது பொதுவெளியின் பெரு நம் பிக்கை. இந்தத் தந்திரமே வளர்ந்து பிறகு அரசியலிலும் இராஜதந்திரமாகியிருக்கிறது போலும். எனினும் அறத்தை விலகிய இராசதந்திரம் ஒருபோதுமே மனித குலத்தை ஈடேற்றுவதில்லை.

பாட்டியிடமிருந்து வடையை எடுத்திருந்தாலும் அதைத் தனக்குரியதாக ஆக்கிக் கொள்ள காகத்தினால் முடியவில்லை. (ஆகவே இந்த வெற்றியென்பது நிரந்தரமானதல்ல என்பது புரிகிறதல்லவா!)

பாட்டியிடமிருந்து வடையைப் பறித்த காகத்தை தந்திரத்தின் மூலம் ஏமாற்றிவிடுகிறது







02

உயிரினங்கள் ஒவ்வொன்றும் தத்தம் இருப்புக்காக புத்திசாலித்தனங்களையும் தந்திரங்களையும் கொண்டேயுள்ளன போலும். அதனால் அவற்றுக்கு தந்திரம் செய்வதென்பது ஒரு அடிப்படை விதியாக உள்ளது.. இந்த விதியை இழக்கும்தோறும் அந்த உயிரினங்கள் தங்களின் இருப்பை இழந்து போகின்றன.

எனவே தந்திரங்களின் மூலம் ஒன்றை ஒன்று வெல்கின்றன. அதற்காக ஒன்றை ஒன்று தந்திரம் செய்கின்றன.

மனித வாழ்க்கை இந்த விதியிலிருந்து வேறுபட்டு விலகியுள்ளது. அது விழுமியங்களாலும் ஒழுங்கமைப்புகளாலும் நெறிப்படுத்தப் பட்டது. மனிதனுடைய வாழ்க்கை ஏனைய உயிரினங்களின் வாழ்க்கையை விட வேறு பட்டதாக இருப்பதே இதற்குக் காரணம். அது பிரத்தியேக அம்சங்களை அதிகமாகக் கொண்டதாக மாறியிருக்கிறது. பிரத்தியேக மானதாக மாறுந்தோறும் அதற்கான அடிப்படைகளும் தேவைகளும் வேறுபட்டே இருக்கும். ஆகவே அவற்றை அடைவதற்கும் அவற்றைப் பேணு வதற்கும் விழுமியங்களும் ஒழுங்கமைப்புகளும் தவிர்க்க முடியாதவை. விழுமியங்களையும் ஒழுங்கமைப்பையும் பேணுவதைப் அங்கே அறம் என்பது தவிர்க்க முடியாத ஒரு அடிப்படையாக இருக்க வேண்டும். அறமற்ற நிலை என்பது பெரும் சிதைவுகளிலேயே எல்லாவற்றையும் கொண்டு சென்று சேர்க்கும். அறவீழ்ச்சி அல்லது அறப்பிழை நிகழும்போதே முரண்பாடுகளும் பிரச்சினைகளும் உருவாகின்றன. அறத்தின் அடிப்படையில் நின்றவாறே தன் முன்னே இருக்கின்ற தடைகளையும் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டும். அறத்தை விலகிய எத்தகைய எதிர் கொள்ளல்களும் தற்காலிக வெற்றிகளுக்கு அப்பால் நகர்வதில்லை.

விடுதலைப் போராட்டங்கள் ஆரம்பத்தில் அற நியமங்களின் அடிப்படையிலேயே அவை ஆரம்பமாகின்றன. காலப்போக்கில் அதிகாரப் போட்டிகளும் ஏதேச் சாதிகாரமும் அறப்பிழைகளை உருவாக்கி, அவற்றை வேறு திசைகளை நோக்கித்திருப்பி விடுகின்றன.

பாட்டி வடைசுட்ட கதையில் பாட்டியின்வடையை அபகரித்த காகம் பாட்டிக்கு அறப்பிழையை இழைக்கிறது. அது பாட்டியிடமிருந்து எந்த நியாயமுமில்லாமல் வடையைக் களவாடிச் செல்கிறது; அடாத்தாக எடுத்துச் செல்கிறது. பாட்டி எந்த விதமான நியாயமும் இல்லாமல் காகத்திடம் வடையைப் பறிகொடுக்கிறாள். பாட்டியின் உழைப்பைப் பொருட்படுத்தாமற் காகம் வடையை எடுத்துச் செல்கிறது.

ஆனால், அந்தத் தவறுக்காகவே அது அடுத்த கணத்தில் வடையை இழக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மற்றவர்களுடையதை எடுப்பது தவறு. அது ஒருபோதும் நிலைக்காது என்பதை வலியுறுத்துகிறது கதை. அறப்பிழையென்றால் அது உணர்த்துகிறது. அதிகம் பேர் உணரத்தவறுகின்ற விடயம் இது.

எனவே, பிறருடைய உழைப்பை, உரிமையை அபகரிக்காதே என்பதே கதையின் சாரம். அப்படி அடாத்தாக எதையும் அபகரித்தால், அதைத் தட்டிச் செல்வதற்கு வெளியே யாராவது இருப்பர் அதுவே இங்கே நரியின் வடிவில் உணர்த்தப்படுகிறது.

இந்த உணர்கை ஏன் தவறவிடப்பட்டது என் பதே இங்கே கேள்வியாகும். ஆகவே இங்கே அறப்பிழையே பிரதான மையப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறப்பிழை கதையை எடுத்துரைப்போரிடம் சுர்மைப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்படவில்லை. என்றாலும் நுண்ணிய முறையில் கதை கேட்கும் மனதுக்கு பாட்டியின் இழப்பும் துயரமும் அவளுக்கு நேர்கின்ற பாதிப்பும் புரியும். அந்த மனம் நரியின் தந்திரத்தையிட்டு வியப்படையாது. காகத்தின் கெட்டித்தனத்தையிட்டு அது ஆச்சரியப்படாது. பதிலாக அது அங்கே நிகழ்கின்ற அறப்பிழைகளையே கணக்கிடும். □

# மருதங்கேணி பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


2012 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரின் ஆகியோர் தமது நிதி மூலம் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கென 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். இதன்படி

குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென 1இலட் சத்து 20 ஆயிரம் ரூபாவும், உடுத்துறை மகாவித் தியாலயந்திற்கு பாண்ட் வாத்தியக்கொள் வனவுக்கென 1இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கென 1இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், மருதங்கேணி இ.த.க. பாட சாலைக்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக் கென 1இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், வத் திராயன் மத்தி விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உப கரணங்கள் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும், உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக்கென 40 ஆயிரம் ரூபாவும், மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு தளபாடக்கொள்வனவுக் கென 40 ஆயிரம் ரூபாவும், வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 40 ஆயிரம் ரூபாவும், மருதங்கேணி வடக்கு மாதர் அபிவிருத்திச்சங் கத்திற்கு தையல் இயந்திரக்கொள்வனவுக்கென 25 ஆயிரம் ரூபாவும், வெற்றிலைக்கேணி மாதர் அபிவிருத்திச்சங்கத்திற்குத் தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 25ஆயிரம் ரூபாவும் ஒதுக்கி யுள்ளனர்.

# விவசாய செய்கை தன்னிறைவடைய கால்நடைவளர்ப்போர் ஒத்துழைக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர் களாகச் செயற்படும் போதே விவசாயத்தின் மூலம் எமது தேசம் தன்னிறைவடையும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென் மராட்சிப் பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுவின் தலைவரு மான சில்வேஸ்திரி அலன் ரின்(உதயன்) தெரிவித்துள்ளார்.



தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேம்படுத் தும் வகையில் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவ தற்கான விசேட கலந்துரையா டல் அண்மையில் தென்மராட் சிப் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடை பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

கட்டாக்காலி கால்நடைகளை முழுமையாக் கட்டுப் படுத்தக் கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர் களாகச் செயற்படும் போதே அது சாத்தியமாகும். விவசாயச் செய்கையை மேம்படுத்தக் கால் நடை வளர்ப்போர் தமது முழு மையான ஒத்துழைப்பை வழங் குவதன் மூலமே விவசாயத்தி னூடு எமது தேசம் தன்னிறை வடையும் என அவர் தெரிவித் தார்.

காலபோக பயிர்ச்செய்கை யின் போது வயல்நிலங்களில் கட்டாக்காலி கால்நடையை உரிய திணைக்களமும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங் களில் சாவகச்சேரி பிரதேச சபை யும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தவேண்டும் எனவும், ஒலிபெருக்கி மூலம் கட்டாக் காலி கால்நடைகளை கட்டுப் படுத்துமாறு கால்நடை வளர்ப் போருக்கு பொது அறிவித்தல் விடுமாறும் பணிப்புரை விடுத் தார்.

தொடர்ந்து விவசாய சம் மேளனங்களிடையே பிரதிநி திகள் தெரிவு செய்யப்பட்டு குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், கிராம அலுவலர்களும் இக்குழு வில் அங்கம் பெறுகின்றனர். இக்குழுக்கள் பிரதேச சபையு டன் இணைந்து செயலாற்ற வேண்டும் எனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளரும், சாவ கச்சேரி பிரதேச சபையின் எதிர்க கட்சித்தலைவருமான சூசை முத்து அலெக்சான்டர (சார்ள்ஸ்), சாவகச்சேரிப் பிரதேச சபை செயலாளர் தி.தர்சினி, தவிசா ளர் துரைராஜா, ஈ.பி.டி.பியின் கொடிகாமப் பிரதேச இணைப் பாளர் விஸ்வா விவசாயத் திணைக் கள அதிகாரிகள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்ட னர்.

# "மகிழ்ச்சியான வாழ்வு" நூல் கருத்தரங்கு

(துணுக்காய்)

வடமாகாணக் கல்விச் செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள சகல கல்வி வலயங்களிலும் மகிழ்ச்சியான வாழ்வு தொடர்பான நூல் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட அனைத்து அதிபர்களுக்கும் மாங்குளம் ஆசிரியர் வள நிலையத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 11.00 வரை கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

தரம் 1-5 வரை கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 25ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 2.00 வரையும், தரம் 6-11 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 26ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 2.00 மணிவரையும் நடைபெற உள்ளது. எனவே இக் கருத்தரங்கில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் 2 ஆசிரியர் வீதம் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி கே.எம். வெனிற்ரன் கேட்டுக்கொண்டுள்ளார். (42)



கே.ஆர் டேவிட்டின் 'பாடுகள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். பல.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது தினகரன் முன்னாள் ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் ஆய்வுரை நிகழ்த்துவதையும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நூலின் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (படங்கள் ஆர். ராஜகுமார்)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

மருந்தகம் ஒன்றுக்கு கணக்கு வேலைகள் செய்வதற்கு A/L படித்த பெண் பிள்ளை தேவை. (யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்டவராக இருத்தல் வேண்டும்) தொடர்புக்கு 021222 9288.

---

D.M.I சர்வதேச கம்பனிக்கு முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை. 04 பதவிவெற்றிடங்கள் உள்ளன. 6 மாத கால பயிற்சி, பயிற்சியின் போது 8ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரை பெற்றுக் கொள்ளலாம். (புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வந்தவர்களுக்கும் ஆண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் தொடர்புக்கு 077 6219536 - 0771980851.

---

வீடுகளுக்குச் சென்று வியாபார பரப்புரை செய்யக் கூடிய திறன் கொண்ட ஊழியர் ஒருவர் வேலைக்குத் தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவராக இருப்பதுடன் கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும் தொடர்புக்கு 077 9550 363.

---

காவேரி சில்க்ஸ் ஆடைவிற்பனை நிலையத்திற்கு விற்பனை யாளர்கள் தேவை. (ஆண்-பெண் இருபாலாரும்) பழக விரும்பு கிறவர்களும் தொடர்பு கொள்ளலாம். தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும் தொடர்புக்கு 021 222 2333.

---

ஒக்டோபர் மாதம் புதிதாகத் திறக்கப்படவுள்ள நல்லி சில்க்ஸ் கிளை நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண்பெண் இருபாலாரும்) பழக விரும்புகிறவர்களுக்கு அடிப்படைச்சம் பளம் 8 ஆயிரம் ரூபா வழங்கப்படும் தகமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும் நல்லி சில்க்ஸ் இல 121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

---

ஆசியாவில் மிகப்பெரிய நிறுவனங்களின் ஒன்றான the Granton Growp நிறுவனத்தின் முழுமையான பக்க பலத்துடன் இயங்கும் இலங்கையின் வடமாகாண கிளைகளுக்கு (யாழ்ப் பாணம், வவுனியா, கிளிநொச்சி) முகாமைத்துவ பயிற்சிக்கு O/L ,A/L சித்தியடைந்த 18-30 வயதுக்குட்பட்ட ஆண்கள் தொடர்பு கொள்ளவும் தொடர்புக்கு 077 7274 795. ,024 490 7449

---

தைத்தொலைபேசி திருத்துவதில் முன்அனுபவமுள்ள Software, Hardware தெரிந்தவர்கள் தேவை. அத்துடன் லிகிதர் (பெண், தேவை தொடர்புக்கு 0778722 307. கணினி ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம் ) தெரிந்தவர்கள் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது தொடர்புக்கு 0772099104.

---

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் நிறுவனத்திற்கு முகாமையாளர் பனர் டிசைனர் அலுவலக உதவியாளர் சிற்றூழியர்கள் (இரு பாலாரும்) ஆகியவற்றுக்கு பணியாளர்கள் தேவை. தொடர்புக்கு 021 222 1358.

---

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வவுனியா, மன்னார் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய கிளைகளுக்கு விற்பனை அபிவிருத்தி உதவியாளர், அலுவலர், நிறைவேற்று அதிகாரி ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அடிப் படைச்சம்பளம் வழங்கப்படும் தகவலுக்கு ஜனகன் 0771902858.

---

யாழ்ப்பாணத்தில் உள்ள வாகனசேர்விஸ் சென்டர் ஒன்றிற்கு வாகன சேர்விஸில் அனுபவம் உள்ள அல்லது பழக ஆர்வம் உள்ள மலையக ஆட்கள் தேவை. 0777 290 300.

---

வேலையில்லா இளைஞர் யுவதிகளின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு எங்களிடம் உள்ளது. எங்களுடைய பிரதான தொழிற் சாலைக்கு ஆண், பெண்தேவை. வயது 18-45 சம்பளம் 15ஆயிரம் முதல், 25ஆயிரம், 35ஆயிரம் வரை. நாடு பூராகவும் வேலை வாய்ப்பு தொடர்புக்கு 0721664849.

---

வீட்டுப் பணிப்பெண்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்பு மாதம் ஒன்றுக்கு 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெற்றுக்கொள்ள முடியும் அனுபவமில்லாதவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். வெளிநாட்டுக்காரர் வீடுகளுக்கு பணிப்பெண் தேவை. இரண்டு வருட ஒப்பந்தம் தொடர்புக்கு 077 549 7257.

---

பட்டாசு, கடதாசி, ஹாட்வெயார், கொமினிகேசன், டெலிவரி செல்வதற்கு சாரதி சேல்ஸ் மேன் ஆகியவற்றிற்கு வேலையாட் கள் ஆண், பெண் தேவை தொடர்புக்கு 077 512 5300.

---

வவுனியாவின்பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. சமையாலாளர், ரீமெக்கர், வெயிட் டர்ஸ், பிரைட்றைஸ் தயாரிப்பவர் தேவை. தொடர்புக்கு 0777 488087.

---

பிரபல நிறுவனத்திற்கு நாடு பூராகவும் உள்ள எல்லா பிரதேசங்களிலும் முகாமையாளர் மேற்பார்வையாளர், அலுவலக ஊழியர்கள் ஆகியவற்றுக்கு வேலை வாய்ப்பு உண்டு முதல் பயிற்சிக் காலத்தின் போது 12ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுவதுடன் பின்னர் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு தொடர்புக்கு 0770065222, 072 7650852.

# கடற்படையினருக்கு புத்தப்பயிற்சி ஜப்பானுடன் இணைந்து கூட்டு முயற்சி

(கொழும்பு)

கடற்படையினருக்கு நவீன தொழில் நுட்பங்களைப் பிரயோகித்து படை நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

ஜப்பானிய கடற்படையினர் மேற்படி பயிற்சித்திட்டத்திற்கான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக ஜப்பானின் இரண்டு போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று வருகைதந்தன.

'சிமுயுக்காய்' மற்றும் 'மட்சுக்காய்' என்ற பெயர்களைக் கொண்ட இரண்டு கப்பல்களே கொழும்பு துறைமுகத்துக்கு வருகைதந்துள்ளன.

ஏற்கனவே ஜப்பானின் கசிமா என்ற போர்க்கப்பல் நல்லெண்ண விஜயத்தின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு துறைமுகதத்துக்கு வந்தது.

இதேவேளை, குறித்த மூன்று ஜப்பானிய கப்பல்களும் எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கையில் இருந்து செல்லும் முன்னர், இலங்கை கடற்படையின் 'சமுத்ரா' கப்பலுடன் இணைந்து கூட்டுப்பயிற்சியில் ஈடுபடவுள்ளன.



யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 84 வீதிகள் தற்போது காபட் இடப்பட்டு செப்பனிடப்படுகின்றது. இதன் ஒரு கட்டமாக கோயில் வீதியும் காபட் இடப்படுகிறது. ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணப் பொறுப்பாளர் றீகன் நேரில் சென்று இவ்வீதி புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டபோது... (படம்: ராஜ்)

## மூன்று பாடசாலைகள் அபிவிருத்தியில் இணைப்பு

(யாழ்.நிருபர்)

ஐயாயிரம் பாடசாலைகள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கென காரைநகரில் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தோப்புக்காடு, மறைஞான சம்பந்தர் வித்தியாலயம், ஊரி அ.மி.த.க பாடசாலை, வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை என்பனவே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளாகும். காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் வீ.கண்ணன் (ரஜனி) மேற்கொண்ட முயற்சியால் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் முதற்கட்டமாக இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (10)

## எரிபொருள் முத்திரை விநியோகம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரை விநியோகம் எதிர் வரும் மாதங்களில் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் வைத்தே வழங்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் வெளிக்களப் பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ். மாவுட்டத்தின் அந்தந்தப் பிரிவு கடற்தொழில் பரிசோதகர்கள் அந்தந்தப் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று இவ்எரிபொருள் மானிய முத்திரைகளை கடற்தொழிலாளர்களுக்கு விநியோகித்து வந்தனர். வரும் மாதங்களில் அவர்கள் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் பெற்றுக் கெள்ள முடியும். தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் 2000 இற்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு எரிபொருள் மானியம் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (பா, இ)

## பரமர் சங்கமம்



'சாய்ந்தால் சாயுற பக்கம் சாயுற செம்மரி ஆடுகளா? என்று பழைய பாடலொண்டு இருக்கு. அது போல தான் நம்மில் சிலருடைய செய்கைகள் அமைவதனால் வாழ்கையில் முன்னேற முடியாமல் அல்லாடுகின்றனர்.

இரண்டு, மூன்று தசாப்தங்களுக்கு முன்னால கிளிநொச்சிப் பகுதியில் தோட்டக்காரரொருவர் மிளகாய் பயிரிட்டு அதிக இலாபம் ஈட்டிக் கொண்டதாகப் பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் அடிபட்டன.

அதனைக் கண்ட பலர் மிளகாயைப் பயிரிட்டனர். அதனால் சந்தையில் மிளகாய் அதிகமாக வந்து குவிந்ததால் விலையும் குறைந்து மிளகாய்க்கு அந்த முறை மௌசும் குறைந்து போயிற்று.

குறைவாக ஒரு சிலர் பயிரிட்ட வெங்காயம் உச்ச விலைக்குச் சென்றது. மட்டுமல்ல. தேவைக்குப் போதிய வெங்காயம் நாட்டில் கிடைக்காமல் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டதுமுண்டு.

இதனால் தான் போலும் கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் எண்ட பழமொழியும் தோன்றியது. இப்ப கொஞ்ச நாளா அவுஸ்ரேலியாவுக்குப் போகிறவர்களின் செய்திகள் அதிகமாக அடிபடுகிறது.

நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படுவதாகவும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இலங்கையில் சகல கரையோர கிராமங்களில் இருந்தும் அவுஸ்ரேலியாவுக்கு படகுகள் செல்வதாக அறியமுடிகின்றது.

இதுக்கிடையில் இவ்வாறு சட்டவிரோதமாக பயணித்த பலரது தகவல்களைப் பெற முடியாமல் இருப்பதாகவும் அவர்களின் முடிவு விபரீதமானதாக அமைந்து விட்டதாகவே பெரும்பாலும் நம்பப்படுகிறது.

தொடர்ந்து 18 நாட்கள் இரவு பகலாக உணவு இன்றி சுகாதாரச் சீர்கேடுகளுடன் இவ்விதம் பெருந்தொகையான மக்கள் செல்வதற்கான காரணந்தான் என்ன?

அவுஸ்ரேலியா போன்ற பெரிய நாடுகள் என்று வர்ணிக்கப்படுகின்ற நாடுகளுக்கு ஒழுங்கான முறையில் செல்வதற்கு இலங்கை அரசு இலகுவில் அனுமதி வழங்குவதில்லை. என்பதுடன் அப்படிப் போவதால் 25 இலட்சங்களிலிருந்து 30, 35 இலட்சங்கள் தேவைப்படுவதாகவும் படகுகளில் செல்வதற்கு 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சங்களுக்குக் குறைவாக இருப்பது காரணங்களாக அமைவதாகவும் நம்பப்படுகிறது.

நிச்சயம் இல்லாத அதுவும் ஆபத்துச் சூழந்த வசதிகள் எதுவும் இல்லாமல் உயிரைப் பணயம் வைத்து செல்லும் பிரயாணத்தில் இடை நடுவே பிடிபட்டால் இலட்சங்களையும் இழந்து மறியலையும் அனுபவிக்க நேரிடும்.

அந்தப் பத்துக்குட்பட்ட இலட்சங்களை இங்கே முதலிட்டு நல்லா வருவதைப் பாழாக்கி ஒருவரைப் பார்த்து ஒருவர் நாட்டை விட்டு இப்படிப்போக வேண்டுமா?

"சாஞ்சால் சாயுற பக்கம் சாயுற" எண்ணமும், மனமும் மனித குலத்துக்கு இருக்கிறவரை இத்தகைய புதினங்களைத் தினமும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் இல்லையே பின்ன...

## கொடியேற்றம்

(யாழ்.நிருபர்)

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாககள் சிறப்பாக நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத்தொடர்ந்து முற்பகல் 8.30 மணிக்கு இரதோற்சவமும், மறு நாள் 29 ஆம் திகதி சனிக் கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

## மின்தடை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று 17 ஆம் திகதி உயரழுத்த மின்திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளதனால் நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென முல்லைத்தீவு மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில் செல்வன் அறிவித்துள்ளார். (12)

## முரசின் இன்றைய பலன்


(17.09.2012 - திங்கட்கிழமை)


நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 01 ஆம் திகதி.
நட்சத்திரம் அத்தம் பின்னிரவு 2.23 வரை
சித்தம். திதி பிரதமை காலை 7.06 வரை பின் துதியை.
இராகுகாலம் 7.33 - 9.03 வரை. சுபநேரம் 12.03 - 1.33 வரை
எமகண்டம் 10.33 - 12.03 வரை, குளிகன் காலம் 1.33 - 3.03 வரை


சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.


| | |
|---|---|
| மேடம் | நிம்மதி பிறக்கும். கருணை உண்டாகும். பிறருக்கு உதவிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சி. கௌரவம். பணவரவு குதூகலம். நண்பர்களுடன் சுற்றுலா. |
| ரிஷபம் | எதிர்ப்பு வரும். பேச்சைக் குறையுங்கள். தொழிலில் இருப்பதை பாதுகாப்பது நல்லது. பணவரவில் தாமதம். தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| மிதுனம் | செயல்களில் நேர்த்தி. சமயோசிதம் அனுகூலம். தாராள பணவரவு. நண்பர்க்கு உதவுவீர்கள். பூர்விக சொத்தால் வருமானம். குடும்பத்தில் சுபநிகழ்வு. |
| கடகம் | குடும்ப எண்ணத்திற்கு மாறு வேண்டாம். காரிய நிறைவேற்றம் தாமதம். வரவை விட செலவு அதிகரிக்கும். போட்டி பந்தயங்கள் வேண்டாம். பயணத்தில் கவனம். |
| சிம்மம் | புதிய மாற்றம். வசீகரப் பேச்சினால் அன்பை பெறுவீர்கள். தொழிலுக்கு உதவி கிடைக்கும். வரவு திருப்தி. வெளியூரிலிருந்து நல்ல செய்தி. வீடு மகிழும். |
| கன்னி | மற்றவர்க்கு நல்வழி காட்டுவீர்கள். சமூகப் பொறுப்புணர்வு. தொழிலில் ஊக்கம். உபரி பணவருமானம். குடும்பத்தில் மகிழ்ச்சி. ஆரோக்கியம் சீராகும். |
| துலாம் | எதிர்ப்பு விலகும். உதவி கிடைக்கும். தொழில் அபிவிருத்தியாகும். பணவரவில் திருப்தி. தேடிய பொருள் கை வந்து சேரும். உறவினர்கள் சீராட்டு. |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்பட நேரும். கடந்த கால அசைபோடுகை. தொழில் சிறந்து நம்பிக்கை வளரும். உபரி வருமானம். அரசு வகை உதவி. தெய்வ பலம். |
| தனுசு | சோர்வு. மனம் விரும்பாதவற்றில் ஒதுங்குதல் நல்லது. குறை கேட்கும் சூழ்நிலை வந்து விலகும். பணச் செலவு. வாகன அவதானம். குடும்ப உறுதுணை. |
| மகரம் | நிதானம் நன்மை தரும். பெருமை சேரும். வேலையில கூடுதல் ஈடுபாடு. வியாபாரம் சராசரி. பணவரவுக்கு காத்திருப்பு நிலை. வாக்குவாதம் தவிர்க்கவும். |
| கும்பம் | உறவினர் பாசம். புதிய பொருள் வாங்குவீர்கள். திட்டம் ஒன்று நிறைவேறும். தொழில் மந்த கதி. வரவுக்கு மீறிய செலவு. மருத்துவ சிகிச்சை. |
| மீனம் | அவசரகதிக்கு மாறுவீர்கள். போட்டி இருக்கும். சச்சரவுகள் தவிருங்கள். பணவரவுக்கு கூடுதல் முயற்சி. உறவினர் மனக்கிலேசம். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். |

இலக்கம் 46 தொடக்கம் 49 வரையான வினாக்களுக்குரிய படங்களின் பெயர்களை எழுதுக.

57.  (.................................)

58.  (.................................)

59.  (.................................)

60.  (.................................)

**இலக்கம் 17 தொடக்கம் 24 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக.**

61. சதுரம் ஒன்றின் சமச்சீர் அச்சுக்களை படத்தில் வரைந்து காட்டுக?

62. செவ்வகம் ஒன்றின் சமச்சீர் அச்சுக்களைப் படத்தில் வரைந்து காட்டுக?

| | ஒத்தகருத்துச் சொல் | எதிர்க்கருத்துச் சொல் |
|---|---|---|
| 63. ஞாபகம் | .................... | .................... |
| 64. சத்தியம் | .................... | .................... |
| 65. கோபம் | .................... | .................... |
| 66. ஒளி | .................... | .................... |
| 67. எதிரி | .................... | .................... |

**கீழ்வரும் குறியீடுகளை அவதானித்து விடை எழுதுக.**



68. நான் பந்து விளையாடுவேன் என்பதைக் குறியீட்டில் காட்டுக.

..................................................

69. நான் நாயுடன் கடைக்குச் சென்றேன் என்பதைக் குறியீட்டில் காட்டுக.

..................................................

70.  என்னும் குறியீடு குறிக்கும் வாக்கியத்தை எழுதுக.

..................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

# கல்வி முரசு

.30 மணி



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. பின்வருவனவற்றில் வேர் மூலம் இனப்பெருக்கம் செய்வது
 1. வாழை 2. தேக்கு 3. பூவரசு

02. பூக்கள் மூலம் எண்ணெய் பெறப் பயன்படும் தாவரம்
 1. சூரியகாந்தி 2. செவ்வந்தி 3. மல்லிகை

03. மனிதனுக்கு உதவும் செயற்பாடுடைய பறவை
 1. குயில் 2. கொக்கு 3. காகம்

04. மூலிகையாகப் பயன்படும் தாவரம் எனக் கருதப்படுவது?
 1. குப்பைமேனி 2. கீரை 3. மல்லிகை

**பின்வருவனவற்றிக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

05. பதிவுத் தபால் ஒன்றுக்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி என்ன?
 1. ரூபா 40.00 2. ரூபா 15.00 3. ரூபா 20.00

06. வௌவாலின் இடப்பெயர்ச்சிக்கு உதவும் ஓர் அங்கம்
 1. கண் 2. கால் 3. காது

07. வித்துக்களிலிருந்து இனம் பெருகாத ஒரு தாவரம்
 1. மா 2. பப்பாசி 3. மரவெள்ளி

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

08. இலங்கையில் மிக நீளமான ஆறு..............................கங்கை ஆகும்.

09. நீர்மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலுநிலையம்..............................ஆகும்.

10. மிக உயரமான நீர்வீழ்ச்சி..............................நீர்வீழ்ச்சி ஆகும்.

11. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப்பெறாதது..............................ஆகும்.

12. மகாவலி கங்கை உற்பத்தியாவது..............................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

**சரியாயின் (√ ) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.**

13. இலங்கையின் தேசிய மரம் நாகமரம் ஆகும். ( )

14. இலங்கையில் மிக நீளமான நதி மகாவலி கங்கை ஆகும். ( )

15. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நோர்வே ஆகும். ( )

**பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. மனிதனுக்கு உதவும் பறவை எது?
    1) கொக்கு 2) கிளி 3) காகம்
17. தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
    1) புளி 2) மா 3) தென்னை
18. நீரில் மிதக்கக் கூடிய ஓர்பொருள் பின்வருவனவற்றுள் எது?
    1) றெஜிபோம் 2) பனிக்கட்டி 3) மேற்சொன்ன இரண்டும்

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

19. புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது புகைவண்டி நிலையத்தில் பெறவேண்டியது, (நுழைவுச்சீட்டு / பிரயாணச் சீட்டு)
20. ஒரு கடிதத்தை அனுப்புவதற்குத் தபாலகத்தில் பெறவேண்டியது (முத்திரை / காசோலை)
21. வங்கியில் பணம் பெறுவதற்குக் கொடுக்க வேண்டியது (குடும்ப அட்டை / காசோலை)
22. பஸ் நிலையத்தில் இறங்குவதற்குச் செய்ய வேண்டியது (சத்தமிடுதல் / மணி அடித்தல்)
23. இம்மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், 20 ஆம் திகதி என்ன கிழமை (வியாழன் / வெள்ளி)

**பின்வரும் கூற்றுக்குரிய சரியான விளக்கத்தின் கீழ் கீறிடுக.**

24. வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும்.
    1. அணை கட்டுகையில் வெள்ளம் வந்தால் உடைந்துவிடும்.
    2. அணை கட்ட வெள்ளம் வரவேண்டும்.
    3. ஆபத்து வருமுன் பாதுகாப்பு மேற்கொண்டு ஆபத்து வராது காத்துக்கொள்ள வேண்டும்.
25. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
    1. முளை இல்லாத பயிர் முளைக்காது. 2. பயிர் முளைக்க நீர் அவசியம்.
    3. எதிர்காலத்தில் ஒருவரது முன்னேற்றம் எப்படி இருக்கும் என அவரது சிறுவயது நடவடிக்கையிலேயே காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 26. கடவுள் இல்லை என்று வாதிப்பவன் | - | (ஆத்திகன், | நாத்திகன், | நீதிபதி) |
| 27. கண் பார்வை இல்லாதவன் | - | (குருடன், | ஊமை, | செவிடன்) |
| 28. தச்சு வேலை செய்பவன் | - | (மேசன், | இடையன், | தச்சன்) |
| 29. ஆடு மேய்ப்பவன் | - | (பாகன், | இடையன், | தச்சன்) |
| 30. தாய் தந்தையரை இழந்தவன் | - | (தபுதாரன், | அநாதை, | ஊமை) |
| 31. வாசிப்பதற்கு புத்தகங்கள் உள்ள இடம் | - | (பாடசாலை, | கடை, | நூலகம்) |

**முதலாவது எண்ணுக்குச் சமமான கணிதச் செய்கை கொண்ட விடையைத் தெரிக.**

| | | | |
|---|---|---|---|
| 32. 24 = | i) 22 x 2 | ii) 45 - 21 | iii) 39 -11 |
| 33. 72 = | i) 5 x 10 | ii) 12 x 6 | iii) 8 x 5 |
| 34. 54 = | i) 63 ÷ 2 | ii) 70 - 14 | iii) 50 + 4 |
| 35. 40 = | i) 80 ÷ 2 | ii) 40 x 2 | iii) 50 - 30 |



**அடைப்பினுள் இருந்து சரியான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.**

36. (வழி, வளி, வலி) அஞ்சாமல் தனி..............................யே போகவேண்டாம்.
37. (வாழை, வாளை, வாலை) கடலில் ..............................மீன்கள் காணப்படும்.
38. (குழவி, குலவி, குளவி) கல்லால் எறிந்ததும் ..............................கூட்டிலிருந்து புறப்பட்டது.
39. (உழவு, உளவு, உலவு) ஒற்றன் ..............................அறிய பகையரசனின் நாட்டிற்குச் சென்றான்.
40. (கழகம், களகம், கலகம்) நாட்டில்.............................. ஏற்பட்டதால் மக்கள் வெளியேறினர்.

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.**

41. பறவைகள்
42. மேசைவிரிப்பு
43. தலை

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல் தருக.**

44. Flowr
45. He
46. sky

**பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.**

47. கிரி
48 பொ(த்)த
49 இந்(ந்)தி ஆப்ப
50 கண்ணாடிய

51. சீரான சுற்றுப் பருமன் உடைய பனை மரம் ஒன்றின் முனைகள் ஒழுங்காக இருக்கத் தக்கவாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்ட குற்றிகளுக்கு வழங்கத்தக்க கணிதப் பெயர் என்ன?

..............................


52. குமார் தனது சம்பளத்தின் 1/2 பகுதியை உணவுக்காகவும் 1/4 பகுதியை ஆடை வாங்கவும் செலவு செய்துவிட்டு, மிகுதியை சேமிப்பிலிட்டான். அவனுடைய சம்பளம் ரூபா 4800 எனின், அவன் ஆடை வாங்கச் செலவு செய்த பணம் எவ்வளவு ரூபாய்?

..............................

53. தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக. ..............................

54. 3, 9, 6 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் எது?
    1) 369 2) 963 3) 693
55. "ஈசல்" என்று அழைக்கப்படும் பிராணியின் முதற்பருவம்
    1. கறையான் 2. வண்ணத்துப்பூச்சி 3. புழு 4. குடம்பி
56. தரப்பட்ட மரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
    1. புளி 2. மா 3. தென்னை

# கூடங்குளம் போராட்டம் பின்னணியில் அமெரிக்கா



(புதுடில்லி)

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பத்திரிகையான ஆர்கனைசர், கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்பாளர்களுக்கு அமெரிக்காவின் ஆதரவு இருப்பதாக தெரிவித்துள்ளது.

அவ்நிறுவனம் கூறியிருப்பதாவது ரஷ்யா உதவியுடனான கூடங்குளம் அணுமின் நிலையம், பிரான்ஸ் உதவியுடனான ஜெய்தாபூர் அனுமின் நிலையம் ஆகியவற்றை மூடுவதற்கு, அமெரிக்கா ஒரு பிரிவினரைத் தூண்டி போராடவைக்கிறது. அதற்காக, தன்னார்வத் நிறுவனங்கள் மூலம் பணத்தை வாரி இறைக்கிறது. இதன் மூலம் போதிய பாதுகாப்பு அளிப்பதாக தன்னை வெளிக்காட்டிக் கொள்ள முயல்கிறது.

ஊழலுக்கு எதிரான அமைப்பின் அரவிந்த் கெஜ்ரிவால் கூடங்குளம் எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு அளிப்பதாக, தன்னைக் காட்டிக் கொண்டு ஆஜராகி உள்ளார். இது, அவர் அரசியல் பிரவேசம் செய்ய திட்ட மிட்டு இருப்பதன் ஒரு அங்கம் ஆகும். இவ்வாறு அவ்நிறுவனம் கூறியுள்ளது.

# அவுஸ்ரேலியா ஆசை உங்களுக்கு வேண்டாம்

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில், அவுஸ்ரேலியாவிற்கு செல்வது சாத்தியமல்ல, ஏமாற்றும் ஏஜண்ட்கள் குறித்து கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம் என்ற நோட்டிசை முக்கிய அலுவலகங்களில், கியூ பிரிவு பொலிஸார் ஒட்டியுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் கிறிஸ்மஸ் மற்றும் கூக்கூ தீவுக்கு செல்லும் ஆசையில், உரிய ஆவணங்களின்றி ஏஜண்ட்கள் மூலம் படகில் செல்வதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். ஏற்கனவே இதுபோல் செல்ல முயன்ற இரண்டு படகுகள், கடலில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

அவுஸ்ரேலியா, கனடாவிற்கு அழைத்து செல்வதாக ஏஜண்ட்கள் ஏற்பாடு செய்யும் படகுகள் பயணத்திற்கு உகந்தது அல்ல. படகுகள் எல்லையில் பிடிபட்டால் சிறப்பு முகாம்களில் அடைக்கப்படுவீர். யாரிடமும் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம். ஏஜண்ட்கள் குறித்து, சென்னை கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம், தகவல் கொடுப்பவர் விபரம் வெளியிடப்படாது. இவ்வாறு நோட்டிசில் உள்ளது.

# உச்சநீதிமன்றில் கச்சதீவு வழக்கு விரைவில் மனு தாக்கல்

இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்ட கச்சதீவு ஒப்பந்தம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கினை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோரி தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த 1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கச்சதீவை இலங்கைக்கு அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு அன்பளிப்பாகக் கொடுத்தது.

இதனால் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்க முடியாத சூழ்நிலை நிலவிவருகின்றது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்ந்து நடந்து வருகிறது.இந்த நிலையில் கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்த ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல எனச் சுட்டிக்காட்டி அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் என்ற முறையில் கடந்த 2008ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா வழக்குத் தொடர்ந்தார்.

எனவே கச்சதீவு ஒப்பந்தம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை உச்ச நீதிமன்றம் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரித் தமிழக அரசின் சார்பில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்படும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.


# அமெரிக்கத்தூதரகத்துக்கு அதி உச்ச பாதுகாப்பு

(சென்னை)

அமெரிக்காவில் வெளியாகியுள்ள ஆங்கிலத் திரைப்படத்தில் நபிகள் நாயகத்தை இழிவு படுத்தும் வகையில் காட்சிகள் இடம்பெற்றிருப்பதற்குப் பல்வேறு நாடுகளில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அமெரிக்காவுக்கு எதிராக அந்தந்த நாட்டுத் தூதரகங்கள் முன்பு போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

லிபியாவில் அமெரிக்கத் துணை தூதர் ஒருவரும் வன்முறையில் பலியானார். இது சம்பந்தமாக தொடர்ந்து அமெரிக்கத் தூதரங்கள் முன்பு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை அண்ணாசாலையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் நடைபெறற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது தூதரகத்தின் மீது கல்வீசித் தாக்கப்பட்டது. அலுவலக கண்ணாடிகள், கதவுகள், கேமரா, மற்றும் பொருட்களை போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர்.

இதுகுறித்து தூதரகம் சார்பில் ராஜப்பேட்டை பொலிஸில் புகார் செய்யப்பட்டது. உதவி கமிஷனர் ராமச்சந்திரன், இன்ஸ்பெக்டர் ராஜசேகர் ஆகியோர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.



கும்பலாகக் கூடி பொது சொத்துக்களுக்கு. சேதம் எற்படுத்தியதாக தி.மு.க. நிர்வாகிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக அப்துல் ரகீம், அன்சாரி, அசன்அன்சாரி, யாகூப், ரகமதுல்லா, ஷேக்மைதீன், ஜெரால், கவுஸ்பாஷா, காதர்மொய்தீன், உசேன், முனவர் முஸ்தபா, கச்சி முகமது, முகமது கனி, முகமது அனிபா, முகமது அபுபக்கர், அப்துல் ரகீம், இன்னொரு அன்சாரி ஆகிய 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்க தூதரகத்தில் 24 மணி நேரமும் பொலிஸார் எப்போதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருப்பார்கள் பலத்த பாதுகாப்பையும் மீறி அங்கு நடைபெற்ற தாக்குதல் சம்பவம் உயர் அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதைத் தொடர்ந்து துணை கமிஷனர் ஒருவர் தலைமையில் 2 உதவி கமிஷனர்கள், 5 இன்ஸ் பெக்டர்கள், 10 சப் - இன்ஸ் பெக்டர்கள், மற்றும் 50இற்கும் மேற்பட்ட போலீசார் அமெரிக்க தூதரகம் முன்பு பாதுகாப்பு அரன் அமைத்து தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள். தூதரகத்தின் அருகில் யாரும் நெருங்க முடியாத அளவுக்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# முதுகு எலும்பை முறிக்கக் கூடாது மம்தா பானர்ஜி சாடல்



(கொல்கத்தா)

பொருளாதார சீர்திருத்தம் தேவையான-துதான். ஆனால் இதற்காக ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் வெளிநாட்டு கம்பெனிகளுக்கு விற்க முயற்சி செய்யக் கூடாது என்று மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி கருத்துத் தெரிவித்துள்ளார். ∴பேஸ்புக்கில் தனது இணையப் பக்கத்தில் மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி எழுதியிருப்பதாவது: பொருளா-தாரச் சீர்திருத்தம் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையானதுதான். ஆனால் அதற்காக எல்லாவற்றையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்றுவிடக் கூடாது. அப்பாவிப் பொது மக்களின் முதுகெலும்பை முறிப் பவையாக இருக்கக் கூடாது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு, எனவே சீர்த்திருத்தங்களின் பலன்கள் ஏழைகள் மற்றும் சாதாரண மக்களை அடைய வேண்டும். வெ-ளிநாடுகளில் இருந்து கருப்புப் பணத்தை மீட்டு நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் பங்குகள் விலை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரிக்கும். சாதாரண மக்களின் நலனைக் காக்க உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம். இவ்வாறு மம்தாஎழுதியுள்ளார்.



திருப்பதியில் நடைப்பெறும் கருடசேவை நிகழ்ச்சியை முன்னிட்டு, சென்னை அய்னாவரத்தில் பாரத் இந்து முன்னனி சார்பில், 600 கிலோ எடைக்கொண்ட பெரிய லட்டு தயாரிக்கப்பட்டு, சிறப்பு அலங்காரத்தில் உள்ள ரங்கநாதருக்கு வைத்து பக்தர்கள் சிறப்பு பூஜை நடத்தினர்.

# நடிகர் லூஸ்மோகன் மறைவு



தமிழ் சினிமாவின் பழம்பெரும் நகைச்சுவை நடிகர் லூஸ்மோகன் வயது - 84, நேற்றுக் காலமானார். தமிழ் சினிமாவில் 1000த்திற்கும் மேற்பட்ட படங்களில் நகைச்சுவை வேடத்தில் லூஸ்மோகன் நடித்திருக்கிறார்.

கொலிவுட்டில் கடைசியாக 2008ஆம் ஆண்டு வெளிவந்த சுட்டபழம் படத்தில் நடித்தார்.

பின்னர் இரு கன்னட மொழிப் படங்களில் நடித்தார். அதன் பின்பு இவர் கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்தார்.

தனது ஒரே மகன் கார்த்திக்வீடு உள்ள மைலாப்பூரில் வசித்து வந்தநிலையில் நேற்றுக் காலை அவர் காலமானார்.

இவரது மனைவி பச்சையம்மாள் கடந்த 2004ஆம் ஆண்டு இறந்தார். காலமான லூஸ்மோகனது உடலுக்கு இறுதிச்சடங்கு சென்னை மைலாப்பூரில் நேற்று நடைபெற்றது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்


........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# அணுகுண்டு தொழில் நுட்பம் விற்பனை

## பாகிஸ்தானின் பரம இரகசியம் அம்பலம்



(பாகிஸ்தான்)

அணுகுண்டு தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தை பாகிஸ்தான் இரு நாடுகளுக்கு வழங்கியதாக அந்நாட்டு அணு விஞ்ஞானி ஏ.கியூ.கான் கூறியுள்ளார். அந்த நாடுகள் எவை என்பதை அவர் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. எனினும் லிபியா, தென்கொரியா ஆகிய நாடுகள்தான் பாகிஸ்தானிடம் இருந்து அணுகுண்டுத் தொழில் நுட்பத்தைப் பெற்றதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தான் பிரதமராக பெநசீர் புட்டோ இருந்த காலத்தில் இரு நாடுகளுக்கு அணுகுண்டுத் தொழில்நுட்பத்தை அளிக்குமாறு எனக்கு உத்தரவிட்டார். அப்போது பிரதமரின் உத்தரவை நிறைவேற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அணு தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்வது என்பது எளிதான காரியமல்ல. சுமார் 800 பேரது மேற்பார்வையில் அப்பணி நடைபெற்றது. 1998-ம் ஆண்டில் இந்தியா அணுகுண்டுப் பரிசோதனை மேற்கொண்டபோது பாகிஸ்தானும் அணுகுண்டுச் சோதனை மேற்கொண்டது. ஆனால் அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப், அணுகுண்டுச் சோதனையை மேற்கொள்ள முழுமையாகத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் அமெரிக்காவால் தனது அரசுக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று அவர் பயந்தார்.

ஆனால் நானும் அவரது நெருங்கிய அரசியல் நண்பர்களும், இது தொடர்பாக அவரிடம் எடுத்துக் கூறி அணுகுண்டுச் சோதனையை மேற்கொண்டோம். அப்போது அவர் உறுதியாக இருந்திருந்தால் இந்தியா அணுகுண்டுச் சோதனை மேற்கொண்ட அடுத்த அரைமணி நேரத்திலேயே நாங்களும் சோதனைக்குத் தயாராகியிருப்போம். ஆனால் சுமார் 2 வாரங்கள் தாமதமாகவே சோதனை நடத்த முடிந்தது என்றார்.

தொடர்ந்து பாகிஸ்தான் எல்லையில் ஆள் இல்லாத விமானங்கள் மூலம் அமெரிக்கா தாக்குவது குறித்துப் பேசிய கான், இதுபோன்ற தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள்தான் அதிகம் உயிரிழக்கின்றனர். பயங்கரவாதிகள்தான் கொல்லப்படுகிறார்கள் என்றால் அவர்களின் உடல்களைக் காட்ட மறுப்பது ஏன்? தங்கள் நாட்டு எல்லையில் பிற நாடு தாக்குதல் நடத்துவதை பாகிஸ்தான் அரசியல் தலைமைதான் தட்டிக் கேட்க வேண்டும் என்றார்.

# அமெரிக்காவை அசைக்க முடியாது



(வாஷிங்டன்)

அமெரிக்காவின் காப்டிக் நிறுவனம் தயாரித்துள்ள திரைப் படத்தில் இஸ்லாம் பற்றி ஏதோ விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, எகிப்து, லிபியா நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டன. லிபியாவில் தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீவன் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில், வாஷிங்டனில் அதிபர் ஒபாமா நேற்று முன்தினம் ஒரு கூட்டத்தில் உரையாற்றினார்.

இதன் போது அவர் பேசுகையில்,

உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் இந்த நேரத்தில் உலகத்துக்கு ஒரு உறுதியான செய்தியை சொல்கிறோம். எங்கள் நாட்டு மக்களை தாக்கியவர்கள் நீதியின் பிடியில் இருந்து தப்ப முடியாது. அமெரிக்காவை அசைக்க நினைக்கும் எவரையும் அனுமதிக்க மாட்டோம். அமெரிக்க மக்களை யாரும் தாக்குவதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளவே மாட்டோம். நாங்கள் மத சுதந்திரத்தை மதிக்கிறோம். இஸ்லாம் உட்பட எந்த மதத்தையும் யாரும் துவேஷிப்பதை நிராகரிக்கிறோம். அதே சமயம், வன்முறைக்கு எந்தவிதத்திலும் நியாயம் கற்பிக்க முடியாது. எங்கள் தூதரகங்களை தாக்கியவர்களுக்கு மன்னிப்பு கிடையாது.

உலகச் செய்திகள்

# ஐ.நா. தூதுவர் சிரியாவில்; துப்பாக்கிகள் மௌனிக்குமா?

(சிரியா)

சிரியா அதிபர் பஷார் அல் அஸாத்தை ஐக்கிய நாடுகள் சபையின் சிரியாவுக்கான 'அமைதித்தூதர் லக்தார் பிரஹிமி கடந்த சனிக்கிழமை சந்தித்து, உள்நாட்டில் நடக்கும் போரை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி ஆலோசனை நடத்தினார்.

சிரியாவில் கடந்த 18 மாதங்களாக நடந்து வரும் மோதலில் இருதரப்பிலும் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் சிரியாவுக்கான சிறப்புத் தூதராக இருந்த கோ.'பி அன்னான் விலகியதை அடுத்து, புதிய தூதராக லக்தார் பிரஹிமி நியமிக்கப்பட்டார். கடந்த வியாழக்கிழமை சிரியாவுக்கு வந்த அவர், அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் வாலித் முயாலமுடன் பேச்சு நடத்தினார்.

வெள்ளிக்கிழமை அரசுக்கு எதிராகப் போராடும் குழுக்களைச் சந்தித்து அவர் பேசினார். அப்போது, டமாஸ்கஸ் மற்றும் போராட்டக்காரர்கள் ஆதிக்கம் நிறைந்த பகுதியான அலெப்போ பகுதியில் ராணுவத்தினரின் ரொக்கெட் தாக்குதல், விமானத் தாக்குதலை நிறுத்தவும், இரு தரப்பிலும் அமைதி நடவடிக்கைக்கு வழி ஏற்படுத்தித் தருவதாகவும் பிரஹிமி அவர்களிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவினருடனும் பிரஹிமி பேச்சுவார்த்தை நடத்தினார்.

சிரியா அதிபருடன் நடந்த பேச்சு வார்த்தைக்குப் பின்னர் லக்தார் பிரஹிமி கூறியது, சிரியாவில் நடக்கும் மோதலால் அந்த நாட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு மீண்டும் அமைதியைக் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கு உதவுவதாக சிரியா அரசும் உறுதி அளித்துள்ளது என்றார் பிரஹிமி. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நடந்த மோதலில், 132 பேர் கொல்லப்பட்டதாக சிரியா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.



லெபனான் சென்றுள்ள போப் 16ம் பெனடிக்ட், பெய்ரூட் நகரில் அதிபர் ஜெனரல் மிசெல் ஸ்லெய்மேனை சந்தித்துப் பேசினார்.

# தவிடு பொடியாகிறது நம்பிக்கை

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாட்டுக்கான அமெரிக்காவின் சிறப்பு தூதரான மார்க் கிராஸ்மேன் நேற்று பாகிஸ்தான் அதிபர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேசினார்.

பிரதிநிதி கிராஸ்மேனுடன் பேசிய அதிபர் சர்தாரி அமெரிக்கத் தாக்குதல் குறித்து கூறியதாவது, அமெரிக்க பாகிஸ்தான் இடையே பரஸ்பர நம்பிக்கை தொடர பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் நடத்தும் தாக்குதலை நிறுத்திக்கொள்ள வேண்டும். அனைத்து துறைகளிலும் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது மிக முக்கியம். அது போன்று இருநாட்டு பரஸ்பர உறவுகளையும் தொடர சமத்துவ நம்பிக்கையினை வளர்ப்பது மிக மிக முக்கியம்.


இப்பகுதிகளில் தீவிரவாதத்திற்கு எதிராக ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்படும் தாக்குதல்கள் அந்த முயற்சிக்கு எதிரான பலனை விளைவிக்கும். இப்போது இது குறித்து நாம் மாற்றுவழிகளில் பேசுவதற்கு அவசியமாகிறது. இது நீண்டகாலமாக பிரிக்க முடியாமல் இருந்து வரும் பாகிஸ்தான் அமெரிக்காவின் பரஸ்பர நோக்கத்தை விட்டு விலகி நம்பிக்கையில் பின்னடைவு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# இது நாயா? அல்லது குதிரையா?

(லண்டன்)

நின்றால் 3.4 அடி நிமிர்ந்தால் 7.4 அடி. உலகின் மிக உயரமான நாயாக தேர்வு செய்யப்பட்டுள்ள, அமெரிக்காவின் கிரேட் டேனின், உயரம் இவ்வளவுதான். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இச்சாதனை நாய், இடம் பெற்றுள்ளது. கின்னஸ் புத்தகத்தின், 57 ஆம் பதிப்பு தற்போது வெளியாகி உள்ளது. இதில், உலகின் மிக உயரமான நாயாக, அமெரிக்காவின் மிச்சிகன் நகரைச் சேர்ந்த கிரேட்டேன், இடம் பெற்றுள்ளது. தினமும், 14 கிலோ உணவை கபளீகரம் செய்யும், டேனின் எடை, 70.3 கிலோ. நின்ற நிலையில், பாதம் முதல் தோள் வரை உயரம் 3.4 அடி. பின்னங்காலை வைத்து நிமிர்ந்து நின்றால், உயரம் 7.4 அடி. வயது மூன்று. கிரேட் டேனின் உயரத்தை விட ஒரே ஒரு அங்குலம் குறைவான, கிரேட் ஜார்ஜ், இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

கிரேட் டேனின் உரிமையாளர் டெனிஸ், பெருமையுடன் கூறுகை




யில், டேனினை பார்ப்பவர்கள் பெரும்பாலும் கேட்கும் கேள்வி, இது நாயா? அல்லது குதிரையா? இதை, வேன் மூலம்தான் வெளியே கூட்டிச் செல்ல முடியும், என்றார். கின்னஸ் புத்தகத்தில், இந்தியாவில், நாக்பூர் நகரை சேர்ந்த 18 வயது ஜோதி ஆம்கே, உலகின் உயரம் குறைந்த பெண்ணாக, இடம் பெற்றுள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று வயதான ஜாக்ஸ் டாக், 1.55 மீட்டர் உயரத்துடன் உலகின் உயரமான கழுதையாக தேர்வாகி உள்ளது. சாதாரணமாகக் காணப்படும் கழுதையை விட, இது, 80 செ.மீ., அதிக உயரம்.

# குறைந்த வாழ்க்கைச் செலவு எங்கே?

உலகிலேயே உயிர் வாழ்வதற்கு அதிக செலவு ஏற்படும் நகரம் ஒஸ்லோ என்றும், டெல்லி, மும்பை ஆகியவை வாழ்வதற்கு மலிவான நகரங்கள் என்றும் சுவிஸ் வங்கி யு.பி.எஸ் ஆய்வில் தெரிய வந்துள்ளது. உலகம் முழுவதும் 72 பெரிய நகரங்களில் தனிநபர் வருமானம், செலவு விவரங்கள் குறித்து யு.பி.எஸ் என்ற சுவிஸ் வங்கி ஆய்வு செய்தது.

இந்த ஆய்வில் 122 சரக்குகள் மற்றும் சேவைகளின் விலைகள் மற்றும் நேர அடிப்படையில் தொழிலாளர்களின் கூலி ஆகியவை கணக்கிடப்பட்டது. இதனடிப்படையில், இந்த முடிவு வெளியாகியுள்ளது. இதையடுத்து, சுவிஸ் நாட்டின் ஜூரிச், ஜப்பானின் டோக்கியோ நகரங்கள் உள்ளன.

எனினும், உலகிலேயே ஜூரிச் நகரத்தில்தான் சராசரி ஊதியம் அதிகமாக உள்ளதால், அங்கு ஒரு தொழிலாளி ஒரு பர்கர் வாங்க 13 நிமிடங்கள் வேலை பார்த்தால் போதும். ஒரு ஐபோன் வாங்க 22 மணி நேரம் வேலை பார்த்தால் போதும். ஆனால், பிலிப்பைன்சின் மணிலாவில் இதை விட 20 மடங்கு அதிகமாக



வேலை பார்த்தால்தான், அவற்றை வாங்க முடியும்.

ஜூரிச் நகரத்திற்கு அடுத்தபடியாக நியூயார்க், ஹாங்காங், சீனாவின் ஷாங்காய் போன்ற நகரங்கள் உள்ளன. அதிக செலவு வைக்கும் நகரங்களில் ஒஸ்லோ, ஜூரிச் வரிசையில் நியூயோர்க் 6வது இடத்திலும், மாஸ்கோ 40வது இடத்திலும் உள்ளன. பொருட்களின் விலைகள் அடிப்படையில் பார்க்கும் போது, இந்தியாவின் டெல்லி, மும்பை நகரங்கள்தான் வாழ்வதற்கு மலிவான நகரங்களாக உள்ளன. இவ்வாறு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# கமநல சேவை நிலையம் சேதம் விவசாயிகளுக்கான சேவை பாதிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பிரதேசத்தில் உள்ள கமநல சேவை நிலையம் யுத்தம் காரணமாக அழிவடைந்துள்ளதால் விவசாயிகளுக்கான சேவையை வழங்குவதில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக உடையார்கட்டு கமநல அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

2011 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் குறித்த பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதாகவும் அன்றிலிருந்து கமலநல சேவை நிலையத்தின் ஊடாகக் கிடைக்கின்ற நன்மைகள் எமது விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உடையார்கட்டு பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி கனியூட் பத்திமாநாயகியிடம் கேட்ட போது,

யுத்தம் காரணமாக கமநல சேவை நிலையம் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் இதனால் விவசாயிகளுக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் குறைவாக இருப்பதாகவும், தற்போது கமநலச்சேவை நிலையத்தின் ஒரு அறை மட்டும் திருத்தப்பட்டு அதனுள் நான்கு உத்தியோகத்தர்கள் கடமையாற்றிவருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தக் கட்டடத்தினை புனரமைத்துத் தருமாறு கமநல சேவைத் திணைக்களம் மற்றும் தொண்டு நிறுவனங்களிடம் தெரிவித்த போதும் இது தொடர்பாக அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்தார்.


# ரி.என்.ரி. வெடிமருந்துடன் குருநகரில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் ரி.என்.ரி. வெடிமருந்து மற்றும் வெடிக்கும் கருவிகள் வைத்திருந்த 3 சந்தேகநபர்கள் கடந்த 7 ஆம் திகதி யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து 650 கிராம் ரி.என்.ரி. வெடிமருந்து, 3 வெடிக்கும் கருவிகள், அதற்குப் பயன்படுத்தப்படும் நூல் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. (பா)

# சிறந்த கல்விச் சமூகம் உருவாக பெற்றோர்தின நிகழ்வு அவசியம்



பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோரையும் ஒன்றிணைக்கும் பெற்றோர் தின நிகழ்வுகள் ஒவ்வொரு பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படவேண்டிய நிகழ்வு. இதன்மூலம் சிறந்தெதொரு கல்விச் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெற்றோர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு உரையாற்றுகையில், இப்பாடசாலையின் பௌதீக வளம் உள்ளிட்ட கோரிக்கைகள் மற்றும் இப்பகுதிக்கான மின்சாரம், போக்குவரத்து, வீதி திருத்தம் போன்றவை தொடர்பிலும் கல்விச் சமூகத்தினரால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் நம்பிக்கை வீண்போகாத வகையில் உரிய தீர்வு காணும் வகையில் நிச்சயம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கடந்த யுத்தகாலத்தின்போது இம்மாவட்டம் முழுமையான பாதிப்பைச் சந்தித்திருந்ததுடன், தற்போது இங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நடந்து முடிந்த அழிவு யுத்தத்திற்கு கடந்தகால சுயலாப அரசியல்வாதிகளே காரணம் என்று சுட்டிக்காட்டினார்.

பாடசாலை அதிபர் சிவநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெற்றோர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, முன்னாள் அதிபர் பத்மநாதன், வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேள், கிளிநொச்சி மாவட்ட ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் தவநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# இறுதி, 3 ஆவது இடத்திற்கு வடமாகாண அணிகள் மோதல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட மற்றும் கபடி சுற்றுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்திற்கும் மூன்றாம் இடத்திற்கான போட்டிகளுக்கும் வடமாகாண அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி முதல் பெரதேனியா மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கபடி சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் மூன்றாவது இடத்திற்கான ஆட்டமும் இன்று இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலை அணி மோதவுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போடடியில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியை எதிர்த்து கெனியர ஜற்றீசன் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

இதேவேளை களுத்துறையில் இடம்பெற்ற 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென்.சேவியர் அணி அரையிறுதிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. நேற்று இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் மன்னார் சென்.சேவியர் அணிக்கும் கண்டி கிங்வூட்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் ஜக்சன், 18 ஆவது நிமிடத்தில் கிஷோர், 21 ஆவது நிமிடத்தில் ஜோன்சன் அடித்த கோலுடன் இடைவேளைக்கு முன்னர் சென். சேவியர் அணி 3:0 என்ற நிலையில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டம் நிறைவடைவதற்கு 2 நிமிடங்கள் இருந்த வேளை கண்டி கிங்வூட்ஸ் கல்லூரி அணி ஒரு கோலை அடித்து 3:1 என்ற கணக்கில் ஆட்டம் நிறைவுபெற்றது. (12)

## வடமாகாண...

மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள், விளையாட்டு வீர வீராங்கனைகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

## மனித...

அதனைத் தொடர்ந்து யாழிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் சந்தித்து போரின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இதன்பின்னர் சாவகச்சேரியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

மேலும், மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி செல்லும் ஐ.நா. குழுவினர் இறுதிக்கட்ட போர் நடைபெற்ற பகுதிகளுக்கும் செல்வர். மீளக்குடியமர்ந்துள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

## வேலணையில்...

மேலும் குறித்த இடத்திற்கு விஜயம் செய்த ஊர்காவற்றுறை நீதவான் மகேந்திரராஜா இது குறித்த விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினமும் குறித்த பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (85)

## இலங்கைப்...

கொண்டுள்ளமை தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு ஆத்திரமூட்டக்கூடும் என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## மன்னார் நீதிமன்றத் தாக்குதல்

# நகரசபை அரச உறுப்பினர் மீது மூன்று வழக்குகள் தாக்கல்

(கொழும்பு)

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த யூலை மாதம் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 41 சந்தேக நபர்களில் ஒருவரான மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர் ஒருவர் மீது மன்னார் பொலிஸார் 3 வழக்குகளை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த 41 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த நகர சபை உறுப்பினருக்கு எதிராக ஏற்கனவே மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் மற்றும் மன்னார் ஊடகவியலாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுள்ளது.

மூன்றாவது வழக்காக குறித்த நகர சபை உறுப்பினர் உள்ளடங்கலாக சிலர் மீது மன்னார் கோந்தைப்பிட்டியில் உள்ள மீன்பிடி வாடிகளை உடைத்துச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் மன்னார் நீதிமன்றில் பொலிஸார் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை இம்மாதம் 21 ஆம் திகதி விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் குறித்த சந்தேக நபர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரப்படவுள்ளனர்.

இதேநேரம் மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 41 சந்தேக நபர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, மன்னார் நீதிப்திக்குத் தொலைபேசியில் மிரட்டல் விடுத்ததாகக் கூறப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் அமைச்சர் றிசாட் பதியூதினையும் இம்மாதம் 24 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு பதில் நீதவான் எஸ்.ஆர்.எம்.திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு - முஸ்லிம்...

யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பிலான இறுதித் தீர்மானத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் முஸ்லிம் காங்கிரஸ் வாக்குறுதி அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இரா.சம்பந்தனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ரவூப் ஹக்கீமும் தலைமைதாங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவளிக்குமாறு அரசாங்கமும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எப்போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்பது தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் அறிவிக்கவில்லை என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. அதிகாரிகளின்...

அலுவலர்கள் லிபியாவுக்குச் சென்றார்கள், அதன் பிறகே கேணல் கடாபிக்கு கேடு விளைந்தது. ஐ.நா. காரர்கள் ஈராக், ஆப்கானிஸ்தான், சூடான் போன்ற நாடுகளுக்கு எல்லாம் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்று வந்த பின்னர்தான் அங்கெல்லாம் பிரச்சினை. சூடான் பிரிவதற்கு முன்னர் அங்கு போயிருந்த ஜென்னி மெகலி இங்கும் வருகின்றார்.

அமெரிக்கா ஈராக்கில் நுழைந்த போது ஐ.நா எங்கிருந்தது? அது எதை பார்த்துக் கொண்டிருந்தது? ஆப்கானிஸ்தான், ருவான்டா போன்ற நாடுகளில் பொது மக்கள் கொலை செய்யப்பட்டபோது ஐ.நா. என்ன செய்தது? ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தவறான அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஆனால். ஜாதிக ஹெல உறுமய யூ.என்.எச்.ஆர்.சி வருவதை எதிர்க்கும் என வண. அத்துரலிய தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் தேசிய அரசு ஐ.தே.க. நிபந்தனை



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அனைத்துக் கட்சிகளும் பங்குபெறும் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

காலத்தைக் கடத்தாமல் அரசாங்கம் வடக்கு மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும் என்று அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஜயலத் ஜயவர்தன உள்ளிட்ட குழுவினர் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்கான பொறிமுறை மற்றும் அவற்றுக்கான கால எல்லை தொடர்பில் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன குறிப்பிட்டார்.

நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பது தொடர்பிலும் அதன் நிகழ்ச்சிநிரல் மற்றும் அவற்றுக்கான கால எல்லை தொடர்பிலும் அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் பதவியை இரண்டு ஆண்டுகளுக்கு தமிழர் ஒருவருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முஸ்லிம் ஒருவருக்கும் ஓராண்டுக்கு சிங்களவர் ஒருவருக்கும் வழங்கவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

# 2 மாதங்கள் கடலில் தத்தளித்த 52 இலங்கையர்கள் மீட்பு

சட்டவிரோதமான முறையில் படகின் மூலம் அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 52 இலங்கையர்கள் காலித்துறைமுகத்திற்கு கடற்படையின் விசேட படகொன்றின் மூலம் நேற்று அழைத்துவரப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட அனைவரும் ஆண்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் சிலாபம் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி அவுஸ்ரேலியா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் பயணித்த படகு பழுதடைந்ததன் காரணமாக தொடர்ந்து சுமார் இரண்டு மாதங்கள் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நேற்றைய தினம் அழைத்து வரப்பட்டவர்களில் அநேகமானோரின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கூறினார்.


இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# களவுபோன ரயர்கள் பொலிஸாரால் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள மாகா பொறியியல் நிறுவனத்தின் அலுவலகத்தில் இருந்து களவுபோயிருந்த ஒரு இலட்சத்து 43 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ரயர்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட இருவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (பா)

# சீனத் தலைவர்களின் பயணம் தொடர்கிறது



இரண்டு வாரங்களில், சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர் ஒருவர் இலங்கை வந்துள்ளார். இவருடன் 95 பேரைக் கொண்ட பெரியதொரு சீன அதிகாரிகள் குழுவும் வந்துள்ளது.

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுத் தலைவர் வூ பங்குவோ நான்கு நாள் பயணமாக நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளார்.

இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட உயர்மட்ட அரச தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன் சீனாவும் இலங்கையும் இணைந்து மேற்கொள்ளும் பல்வேறு அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத் திட்டங்களையும் இவர் நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லி தலைமையிலான உயர்மட்ட படை அதிகாரிகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட

# 2 கோடி நட்டம்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இன்னும் இயல்பு நிலைக்கு திருமபாத நிலையில், இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு நாளொன்றுக்கு 2 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையாளர் சங்கத்தின் தலைவர் ஆனந்தபாலித இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தொடருமாக இருந்தால், தொடர்ந்து எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போகலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் எண்ணெய் சுததிகரிப்பு முகாமையாளர் நீல் ஜயசேகர தெரிவிக்கையில்,

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பெற்றோல் பிரித்தெடுக்கும் பணிகளில் மாத்திரம் இந்தச் சிக்கல் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# ஐ.நா. மனித உரிமை அதிகாரிகள் அமைச்சர் பீரிஸுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் இருவர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுலாக்குவதற்கான செயற்திட்டம் மற்றும் இதுவரையான முன்னேற்றங்கள், எதிர்கால திட்டங்கள் குறித்து தானும் லலித் வீரதுங்கவும் மேற்படி அதிகாரிகளுக்கு விபரித்ததாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அனைத்துலக ஆவர்த்தன மதிப்பீட்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்தார். வடபகுதியின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்வதில் அவ்வதிகாரிகள் ஆர்வம் காட்டினர் எனவும் அமைச்சர் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய, பசுபிக், மத்திய கிழக்கு, வட அமெரிக்க பிரிவுக்கான பொறுப்பாளர் ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சொலேரா ஆகிய மேற்படி அதிகாரிகள் இருவரும் வடபகுதிக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூடிக்கிடந்த முன்பள்ளி இயங்க வைக்கப்பட்டது

மூளாய் பிள்ளையார் கோயிலடியில் அமைந்துள்ள மனிதவள சனசமூக நிலைய முன்பள்ளி, ஆசிரியர் இல்லாது நீண்ட நாட்களாக இயங்காது இருந்தது. இந்த நிலையில் குறித்த முன்பள்ளியை இயங்க வைக்குமாறு பெற்றோர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாம வலய அமைப்பாளரும், வலி. மேற்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் ஆசிரியர் ஒருவரை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

மேலும் குறித்த சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளார். இதேவேளை குறித்த சனசமூக நிலையத்திற்கு ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# பல இலட்சம் ரூபாய்களுடன் சீட்டுப் பிடித்தோர் தலைமறைவு

மன்னார் மாவட்டத்தில் சீட்டுப் பிடித்த பலர் பல இலட்சக்கணக்கான ரூபாய்களுடன் தலைமறைவாகிவரும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் சீட்டுப்பிடித்து ஏமாற்றமடைந்த பலர் மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டுவருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னாரில் பலர் மக்களின் பணத்தினைப் பெற்று சீட்டு பிடிதத்துள்ளனர். இவர்களில் அரச அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

இந்த நிலையில் சீட்டு பிடிக்கும் இவர்களிடம் பலர் வட்டிக்கு பணத்தை வாங்கியுள்ளனர். இந்த நிலையில் பணத்தை வாங்கியவர்கள் சில தினங்களில் காணமற் போயுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பணத்தை பெற்றவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் மக்களிடம் வேண்டிய குறித்த சீட்டுப்பணத்தை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் சீட்டை பிடித்தவர்கள் தலைமறைவாகியுள்ளனர். பல இலட்சம் ரூபாய் வரை ஒவ்வொருவரும் சீட்டுப்பிடித்து ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதேசமயம் பலர் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் தமது அவசரத்தேவை எனக் கூறி தங்க நகைகளையும், பல இலட்சக் கணக்கான ரூபாய் பணங்களையும் பெற்ற நிலையில் தற்போது தலைமறைவாகியுள்ளனர்.

குறித்த நபர்களிடம் தமது பணத்தையும், நகைகளையும் கொடுத்தவர்கள் அவற்றை எவ்வாறு திருப்பி பெற்றுக்கொள்வது என்ற ஏக்கத்துடனும் மன வேதனையுடனும் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பலர் மன்னார் பொலிஸ் நிலைத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## கிணற்றில் விழுந்து மூதாட்டி உயிரிழப்பு

மட்டுவில் - சாந்திபுரம் பகுதியில் மூதாட்டி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சின்னையா - பூரணம் (வயது - 78) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

வீட்டில் எவரும் இல்லாத நிலையில் கிணற்றடியில் முகம் கழுவச்சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி பதில் நீதவான் எஸ்.கணபதிப்பிள்ளை விசாரணைகளை மேற்கொண்டபின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.